

எச்சில்
இரவு
கவிஞர்
சாருகா

# எச்சில் இரவு

கவிஞர் சுரதா

சுரதா பதிப்பகம்
56-A, டாக்டர் லட்சுமணசாமி முதலியார் சாலை.
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.

## BIBLIO GRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | ECHCHIL ERAVU |
| Author | KAVIGNER SURADHA |
| Published by | S. KALLADAN |
| Illustrator | UBALLD |
| Composing, Book Get-up | M. LAWRENCE |
| Language | Tamil |
| Edition | First Edition, January 1980 |
| Copyright Holder | Kavigner Suradha |
| Paper used | 21.7 kg, G. Cr white Printin |
| Size of the Book | 18×12.5 Cm. |
| Printing points used | 11 Pt. |
| No. of Pages | 96 |
| No. of Copies printed | 2,200 |
| Printer | Jeevan press, Madras-5. |
| Binding | Card Board Binding |
| Price | Rs. 6-00 |
| Publisher | Suradha Pathippagam<br>K.K. Nagar, Madras-78 |

# வார்த்தை வாசல்

1958—ஆம் ஆண்டில் நான் வெளியிட்டு வந்த 'இலக்கியம்' என்னும் இதழிலும்; அதற்குப் பிறகு 1966-ல் வெளிவந்த 'சுரதா' என்னும் இதழிலும் நான் எழுதி வந்த இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாகிய 'எச்சில் இரவு' என்னும் இந்நூல், இன்றைய இளைஞர்களுக்கும் இலக்கியச் சிந்தனையாளர்களுக்கும், திரைப்பட எழுத்தாளர்களுக்கும், பாடலாசிரியர்களுக்கும் மிகவும் பயன்படும் எனக் கருதுகிறேன்.

நான் எழுதிய 'தேன்மழை' என்னும் நூலை நண்பர்கள் வரவேற்றது போலவே, இந்நூலையும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

இந்நூலை வெளியிட்ட சுரதா பதிப்பகத்தின் உரிமையாளர் கவிஞர் கல்லாடன் அவர்கட்கும், சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஜீவன் பிரஸ் உரிமையாளர் திரு. கே. எம். ஜான் அவர்கட்கும், இந்நூலில் இடம்பெற்றுள்ள புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் தொகுத்துக் கொடுத்த என் இனிய நண்பரும், பாரதிதாசன் பரம்பரைக் கவிஞருள் ஒருவருமாகிய புலவர் இளஞ்செழியன் பி.லிட்., அவர்கட்கும், பதுமினிசாதிப் பெண்ணின் அழகான பல் வரிசையைப் போன்று, அழகாகவும் ஒழுங்காகவும் அச்சாகும்படி பார்த்துக் கொண்ட என் நண்பரும் இலக்கியச் சுவைஞருமாகிய ஃபோர்மேன், எம். லாரன்ஸ் அவர்கட்கும், உளங்கனிந்த என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600078.

சுரதா
30—1—1980

படித்த மேதைக்குப்
படைக்கின்றேன்.

கி. பி. 1866—ஆம் ஆண்டிலேயே பெண் கல்விச் சாலை ஒன்று புதுவையில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவராகிய மகாவித்துவான் செ. சவராயலு நாயகர் அவர்கட்கு இந்நூலைப் படைக்கின்றேன்.

சுரதா
*30—1—1980*

## புதிய வார்ப்புகள்

இந்நூலில் இடம் பெற்றுள்ள
புதிய சொல்லாக்கங்களும்
சொற்றொடர்களும் :

### புதிய சொல்லாக்கங்கள்

*நிலா நிலம்*
*தையல் தாமரை*
*பூப்பிலக்கணம்*
*குமரி அரும்புகள்*
*ஓசைப்பசி;*
*கோழிச் சூரியன்*
*கருங்கல் கொப்புளம்* (குறிஞ்சி நிலம்)
*கோவலர் கோட்டம்* (முல்லை நிலம்)
*நெருப்பு நிலம்* (பாலை நிலம்)
*ஈரத்தின் எல்லை* (நெய்தல் நிலம்)
*வண்டல் மண்டலம்* (மருத நிலம்)
*கொழுந்துக் குழந்தை*
*கொக்கோகக் குமரி*
*ஐந்தெழுத்துக் கதம்பம்*
*தாய் விலாசக்காரி*
*வலைமாது*
*ஊமை வானம்*
*விளம்பர விழிகள்*
*தொங்கும் நிலவு*
*எச்சில் வரலாறு*

வண்டு வெறியர்கள்
படுக்கைப் படகுகள்
நெம்புகோல் கம்பன்
குத்தகை முத்தம்
கால்நடைக் கவிஞன்
சரச மந்திரம்
வாடகை வாலிபன்
நான்குகால் நாடகம்
நீங்காத நீர் (கடல்)
கண்ணீர் விளம்பரம்
நெருப்பு நாயகன் (சூரியன்)
சுடாத இரவு
நிலவிலே வெந்தவள்
ராத்திரிபதி
கவலையில்லாத தவளைகள்
சருகு சாத்திரங்கள்
சடங்குச் சிந்தனைகள்
தமிழ் முகம்
உடுத்தா விரதம்
அன்றில் இரவு
பகுத்தறிவு மனைவி
தொகுத்தறியும் கணவன்
சொந்தச் சிரிப்பு
பழுத்த கோபம்

# புதிய சொற்றொடர்கள்

மண்படாமல் கடல்நீரில் கண்படும் சூரியன்
அக்காள் தங்கையோடு பிறக்காத அழகு நிலா
வெளிச்சத்தைக் கடன்வாங்கும் வெள்ளி நிலா
உதடுகளால் உதடுகளைத் துடைத்து விடுபவன்
ஓசை வெளிப்படாத பார்வைப் பேச்சு
காத்திருந்த குமரனும் கனிந்திருந்த குமரியும்
பகலின் பங்காளியாகிய இரவு நேரம்
முக்காடு போடாத முழுநிலா
புலால் நாற்றமில்லாத விண்மீன்கள்
தொடாமலும், எச்சில் படாமலும்
காயாகும் பூவாகிய காயாம்பூ
இலவசமாக மலர்கள்தரும் இலவமரங்கள்
அவள் ஒரு பணப்பெண்—பருவப்புண்
பார்வைப் பேச்சும் வேர்வை வெப்பமும்
எண்ணெயின்றி எரியும் விளக்கு
நீண்ட சதுரமான இருட்டு
மேற்கே போகும் வெயில்
மதுவிலக்கை விரும்பாத வண்டுகள்
மரியாதைக்குரிய மகரமீன்கள்
திமிர் பிடித்த திமிங்கிலங்கள்
முத்தும் சங்கும் ஈரக்கடலின் எச்சங்கள்
சேரும் செங்குட்டுவன்
தோண்டப் படாத கருங்கடல்
உடம்பில் புண்ணோடும் உச்சியில் புகையொடும்
தோன்றாத உதயசூரியன்

ஒய்வெடுத்துக் கொண்டிருந்த உதடுகள்
பூனைக்கண் வெள்ளையன்
கண்மத மயக்கம்
எச்சில் விளையாட்டு
சளி பிடித்த சந்திரன்
தீச்சினம் தணிந்த சூரியன்
கலப்பைகள் உழுது வைத்த சேறு
விதைகளின் வயிற்றிலே பிறந்த மரங்கள்
பிறந்த தேதியை மறந்துவிட்ட சூரியன்
தண்ணீர்ப் புடவை கட்டிய தாமரை

—தொகுப்பு : புலவர் இளஞ்செழியன், பி.லிட்;

# மரகதச் சோலையே மஞ்சம்

அவள்—

பல் முளைக்காமலும், நாவில் சொல் முளைக்காமலும் பிறந்தவள்.

முதற் பருவத்தில் அவள் ஒரு பேதை; மூன்றும் பருவத்தில் அவள் ஒரு மங்கை; மாமன் மகன் அவளை மாலையிட்டபோது, அவளொரு மங்கல மடந்தை.

அவள் வதனவட்டம்—ஒரு நிலா நிலம்! அவள் வாயிதழ்கள், சேர்ந்து பிறந்த செம்பவளங்கள். அவள் அழகு நெற்றி, ஓர் அகத்திப்பூ. அவள் அடிவயிறு ஓர் ஆலந்தளிர்.

மேலே கனிந்த கனிகள்; கீழே மலர்ந்த மலர்கள் நடுவில் கட்டுண்ட காய்கள்; அதற்கும் கீழே, உப்பு நீரால் அடிக்கடி நனையும் ஓர் இலை, இவை அனைத்தும் நன்கமையப் பெற்ற ஓர் அதிசயக் கொடி போன்றவள் அந்தத் தையல் தாமரை.

அவள் ஆடும்போது மயில்; பாடும்போது குயில்; ஓடும்போது மான்; கூடும்போது ஒரு குளிர்நதி; அதுவும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் ஒரு மெல்லிய நதி.

அன்றுடம் அவள் திரட்டி வந்த செய்திகள், இனிக்கும் இலக்கியச் செய்திகள். அடிக்கடி அவள் திறந்து படித்த புத்தகம் திருக்குறள். அவள் பறித்துச் சூடிய பூ, கொடிப்பூ. அவள் பாடிவந்த பண், பழம் பஞ்சுரம்.

ஆசையே அவளுக்குத் தோணி. அகத்துறையே அவளுக்குச் சுகத்துறை.

அவனோடு அவள், பலாப்பழத்தின் நெருப்பு நிறச் சுளைகளைப் போன்று நெருங்கி இருக்கவும், வரகின் சின்னஞ்சிறு கதிர்களைப் போன்று சேர்ந்திருக்கவும் தெரிந்தவள்.

அவளுக்கென்று தனிப்பெருமைகள் பல உண்டெனினும் தற்பெருமை மட்டும் அவளிடம் கிடையாது.

ஒருநாள், அந்த ஒருநாளில் அரைநாள்; அந்த அரை நாளை, முறையாக வகுத்துக் கணக்கிடும் மூன்று பொழுதுகளுள் ஒன்றாகிய மாலைப்பொழுது.

பொன்மாலைப் பொழுதில், செங்கதிர் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே இருந்தது. பறவைகள் எவற்றை நோக்கித் திரும்ப வேண்டுமோ, அவற்றை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. தென் பொதிகையிலிருந்து தென்றல் எப்போது புறப்படவேண்டுமோ அப்போது புறப்பட்டு, எப்படி அசைய வேண்டுமோ அப்படி அசைந்து, எங்கெங்குப் போக வேண்டுமோ அங்கங்குப் போய்க் கொண்டிருந்தது.

அவனும் அவளும் அவ்வூரிலுள்ள ஒரு பூஞ்சோலை நோக்கிப் புறப்பட்டனர்.

அவன், அவளுக்குத் தலைவன். ஆதலால், அவன் முன்னே சென்றான். அவளோ அவன் பின்னே

சென்ருள். உடன் நிகழ்ச்சிப் பொருளுக்கோர் எடுத்துக் காட்டாக இருவரும் நடந்து சென்றனர்.

அவன் ஏறுநடை காட்டிஞன். அவளோ வேறு நடை காட்டிஞள். அவனது வெற்றி நடையைக்காண; ஆங்கே வேங்கை வரிப்புலிகள் இல்லை. அவளது சிங்கார நடையைக் காண அப்போது ஆங்கே, செங் கால் அன்னங்கள் இல்லை.

அவன் நடந்தான்.

அவள் தொடர்ந்தாள்.

சிறிது நேரத்தில் இருவரும் சோலைவந்து சேர்ந் தனர். அந்த எழில்மிகு சோலையில், எப்பக்கம் பார்த் தாலும் மரகதப் பச்சை மரங்கள், நோக்கும் இடமெல் லாம் பூக்கள். அப்பூக்களின் மீது இசைபாடும் ஈக்கள்.

தேமாவின் பக்கத்திலே புளிமா; புளிமாவின் பக்கத் திலே பொரிமலர்ப் புன்னை மரங்கள். அங்குமிங்கும் மாமரங்கள், ஆச்சா என்னும் மராமரங்கள். இலவச மாக மலர்களைத் தரும் இலவ மரங்கள்.

ஒரு புறத்திலே, யாப்பிலக்கணத்தின் குறியீடு மரங்களான கூவிள மரங்களும், கருவிள மரங்களும், பூப்பிலக்கணத்தைப் பச்சைக் கிளிகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தன.

மற்ருெரு புறத்திலே, பக்குவமடைந்த பாக்கு மரங்கள். சில கொழுத்த மரங்களின் பக்கத்திலே கொடிகள். அந்தக் கொடிகளின் கக்கத்திலே குமரி அரும்புகள்.

அவனும் அவளும், அந்த இலைமலிந்த சோலையில் உறவாடாமல் உரையாடிக் கொண்டே நடந்தனர்.

அவன் நடையில், வல்லினம் வளர்ந்தது.

அவள் நடையில், மெல்லினம் வளர்ந்தது.

அச் சோலையின் இயற்கை எழிலைக் கண்டு, அவன் அடிக்கடி உள்ளம் உவந்தான். அதனைக் கண்ட மங்கை அவனை நோக்கி 'அத்தான்' என்றழைத்தாள். "ஏன்?" என்றான் அவன்.

"அறிஞர் அரசஞ்சண்முகனார் பிறந்த ஊர் எது?" என்று அவள் அவனைக் கேட்டாள்.

அதற்கவன், "மதுரைக்குப் பக்கத்திலுள்ள சோழ வந்தான் என்னும் சிற்றூர்தான் அவர் பிறந்த ஊர்" என்று சொன்னான்.

"ஒருகாலத்தில் சோழமன்னன் ஒருவன் அங்கு வந்ததனால் அவ்வூருக்குச் சோழவந்தான் என்று பெயர் வந்ததாகவும்; அவ்வூரிலுள்ள சோலைகளின் எழிலைக் கண்டு அச்சோழ மன்னன் உள்ளம் உவந்த காரணத்தால், அவ்வூருக்குச் சோழனுவந்தான் என்று பெயர் வந்ததாகவும்; சோழனுவந்தான் என்பதே பின்னர் சோழவந்தான் ஆயிற்றென்றும் சொல்லுகின்றார்களே, இது சரிதானா" என்று கேட்டாள்.

"சரிதான்" என்றான் அவன்.

அவள் அவனை நோக்கி "சுகத்தை வெறுக்கும் துறவிகள்கூட சோலையை மட்டும் வெறுப்பதில்லை" என்றாள்.

அதற்கவன், "நீ கூறுவது உண்மைதான் என்றாலும், இரக்கத்தின் வடிவமாக விளங்கிய இராம லிங்க அடிகள், நெட்டை மரச் சோலையைவிட, வெட்ட வெளியைத்தான் பெரிதும் விரும்பினாராம்" என்று கூறினான்.

"ஏன்?" என்று கேட்டாள் அந்த ஏந்திழையாள்.

"மலர் நிறைந்த மரங்களும், மரங்கள் செறிந்த சோலைகளும், சோலைகள் நிறைந்த இடங்களும், உள்ளத்தில் சிற்றின்ப உணர்ச்சியைத் தூண்டிவிடும் என்பதால், அவற்றை அவர் விரும்பவில்லையாம்" என்ருன் அவன்.

"அப்படி என்ருல், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே! தருநிழலே!" என்று, ஏன் அவர் சோலையின் சிறப்பை இவ்வாறு பாராட்டிப்பாட வேண்டும்" என்று கேட்டாள்.

அதற்கவன், "தான் விரும்பாத ஒன்றைப் பிறர் விரும்பலாம், பிறர் விரும்புவதால், அதைப் பற்றிப் பாடலாம்! இதில் தவறில்லை! பாரசீகத்துப் பெருங் கவிஞன் உமர்கையாம் என்பவர் மது அருந்தியதே இல்லையாம்! அப்படி இருந்தும் அவர் மதுவைப் பற்றிப் பாடவில்லையா?" என்ருன் அவன்.

அந்தக் கொடியிடையாள், ஆங்கோர் கொடியில் பெரிய காய்கள் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு —மனிதன் மட்டுந்தான் தினையளவுத் துன்பத்தையும் பனையளவுத் துன்பமாகக் கருதுகின்ருன். ஆனால், எந்தக் கொடியும், தன் காய்களின் சுமையைப் பெருஞ் சுமையாகக் கருதுவதில்லை" என்று கூறிக்கொண்டே, அக்கொடியின் மடியிலிருந்த ஓர் அரும்பைப் பறித்து அதனை அவனிடம் காட்டி, அத்தான் இதன் பெயரென்ன? என்று கேட்டாள்.

"உன் பெயர்தான் இதன் பெயர்" என்ருன்.

"அப்படி என்ருல், இந்தப் பேரரும்பின் பெயரென்ன பிச்சியா?" என்று கேட்டாள்.

"ஆமாம், கோபத்தில் உன் முகம் எப்படிச் சிவக்குமோ அப்படி, மழைநாளில் இதுவும் சிவந்து விடும் என்றான் அவன்.

"அப்படியா, கோபத்தைப் போல் சிவப்பதனால், இம்மலருக்கு நாம் கோபம், என்று பெயரிட்டால் என்ன? என்று கேட்டாள்.

"இடலாம். ஆனால், இதே பெயர் ஒருவகைப் பூச்சிக்கும் இருப்பதால், கோபம் என்பதை மாற்றித், 'தீபம்' என்று இதற்குப் பெயரிடலாம்," என்றான் அவன்.

"தீபமா!..." தீபம் சுட்டுவிடுமே?" என்றாள் அவள்.

"தொட்டால்தானே!" என்றான் அவன்.

அப்போது, குயில் ஒன்று கூவியது. அந்த இளவேனிற் குயிலின் இன்னிசை விருந்தை இருவரும் ஒன்றாக உண்டனர்.

"வயிற்றுக்கு வேண்டிய உணவை யார் வேண்டுமானாலும் தந்துவிடலாம். ஆனால், செவிக்கு வேண்டிய உணவை, உலகில்ஒருசிலரால் மட்டுந்தான்தரமுடியும்" என்று கூறினாள் அவள்.

"ஆமாம்! அந்த நாளில், திருச்செந்தூர் சண்முகவடிவு; திருநெல்வேலி ரெங்கம்மாள்; திருவிடைமருதூர் பவானி, தஞ்சாவூர் சாரதாம்பாள், பந்தநல்லூர்ராஜாயி, பழனி அஞ்சுகம், கோயம்புத்தூர் தாய், சேலம் கோதாவரி முதலியோர் தம் இனிய குரலால் மக்களை மகிழ்வித்து வந்தனர். அவர்களுள் சேலம் கோதாவரி என்பவள், புகழ் பெற்ற பாடகியாக மட்டுமில்லாமல் சிறந்த கொடைவள்ளலாகவும் விளங்கியவள். அவள் தன் வாழ்நாளில் சம்பாதித்த செல்வத்தையெல்லாம்

பல நற் செயல்களுக்கே பயன்படுத்தி வந்தாள். குறிப்பாக, சென்னையில் உள்ள பாலரக்ஷணை சங்கத்திற்கு ஐயாயிரம்ரூபாயும், அன்னதான சமாஜத்திற்கு ஆயிரம்ரூபாயும், பச்சையப்பன் கல்லூரிக்கு நாலாயிரம் ரூபாயும், சேலம் சிவன் கோவில் தேருக்கு நாலாயிரம் ரூபாயும், பக்தர்கள் தங்குவதற்காகச் சேலத்தில் ஒரு பெரிய வீட்டையும் வழங்குமாறு தன் உயிலில் அவள் எழுதிவைத்திருக்கிறாள்'' என்று சொன்னான் அவன்.

''இவ்வளவு நன்மைகள் செய்த அவளை இந்த நாடு முற்றிலும் மறந்து விட்டதே'' என்றாள், அவள்.

''ஆறாண்டுகட்கு முன் இருந்த பேரறிஞர்களையே மறந்து போய்விட்டநாடு, அறுபத்தேழு ஆண்டுகளுக்கு முன் இருந்த அவளையா இந்நாடு நினைவில் வைத்திருக்கப் போகிறது!'' என்றான் அவன்.

''சேலம் கோதாவரியை நம் நாடு மறந்துவிட்டாலும் நாம் மறந்துவிடவில்லை'' என்றாள் அவள்.

''கனவுகளை நாம் மறந்து போகலாம். ஆனால் நம்முடைய கண்களை நாம் மறந்து விடமுடியாது?'' என்றான் அவன்.

''நீங்கள் மிகவும் நன்றாகப் பேசுகிறீர்கள்!'' என்றாள அவள்.

''இதற்கெல்லாம் நீ தானே காரணம்'' என்றான் அவன்.

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில், வெண் முல்லைகள் வெளியே தலைகாட்டின.

''கொல்லையிலும் முல்லை; உன் கூந்தலிலும் முல்லை; உன் கோவை இதழ்களிலும் முல்லை'' என்றான் அவன்.

நான்கு திசைகளுக்கும் நடுவிலே நின்று கொண்டிருந்தவள், அவன் குறிப்பிட்ட மூவிடத்து முல்லைகளையும் கேட்டுமகிழ்ந்து, இருவிழிகளால் ஒருமுறை அவனை இச்சையோடு நோக்கினாள்.

அப்போது அவனுக்கு ஆசைப்பசி அதிகரித்தது. அந்தக் கருங்குயிலின் ஓசைப்பசி ஓயவில்லை. அதனால் அது, தன் குறடுவாய் திறந்து கூவிக்கொண்டே இருந்தது.

சிறிய கல்லொன்றை எடுத்து, அந்தக் கருங் குயிலின் மீது அவள் விட்டெறிந்தாள். அந்த வரிக் குயில் பளிசசென்று பறந்து சென்றது.

"சொல்லால் அடித்தால் ஓடாதென்று, ஒருகல்லால் அடித்ததும், அந்தப் பாட்டுப்பறவை பறந்துபோய் விட்டது பார்த்தீர்களா?" என்றாள் அவள்.

"கல்லால் அடிக்காமல், நீ கற்கண்டால் அடித் தாலும், அந்தக் குயில் பறந்துதான் போயிருக்கும். ஏனென்றால் கல்லும், கற்கண்டும் அதற்கு ஒன்றுதான்" என்றான் அவன்.

அவன் நடந்தான். அவளும் நடந்தாள்.

ஒரு நெல்லி மரத்தின் இலைப்பந்தலின்கீழ் இருவரும் சிறிதுநேரம் நின்றனர்.

நெல்லி இலையை உற்றுப் பார்த்த அவள் அவனை நோக்கி 'சிற்றிலை நெல்லி' என்று சங்கப் புலவர்கள் மிகவும் சரியாகத்தான் பாடியிருக்கின்றனர், என்றாள் அவள்.

"எள்ளின் இலையைவிட, விடதாரிஇலை மிகச் சிறியது. எல்லா இலைசளையும் விட வாழைஇலைதான்

மிகப் பெரியது. எனவேதான், வாழை இலையை "'அகலிலைவாழை' என்று கூறினர் என்ருன் அவன்!

"ஆமாம்! குயில் நெல்லிக் கனியே உண்ணும் என் கிருர்களே; இது உண்மையா?" என்று கேட்டாள்.

"உண்மைதான், ஆனல், மற்றக் கனிகளைவிட மாங்கனியைத்தான் குயில் மிகவும் விரும்பி உண்ணும். மகாவித்வான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும் மாங் கனியைத் மிகவும் விரும்பி உண்பாராம்" என்று கூறி ஞன் அவன்.

"அப்படி என்ருல் இனிமேல் நீங்களும் மாங்கனியை அடிக்கடி உண்ணுங்கள் அத்தான்" என்ருள் அவள்.

"ஏன்?" என்று கேட்டான் அவன்.

"அவரைப்போல் நீங்களும் மகாவித்வாஞகி விடலாமல்லவா?" என்று சிரித்துக் கொண்டே சொன் ஞள் அவள்.

"மாங்கனியை உண்பதனுல் மகாவித்வாஞகவோ, தாடி வைத்துக் கொள்வதனுல் தந்தை பெரியாராகவோ, ஆகிவிடமுடியாது பெண்ணே" என்ருன் அவன்.

"அதிருக்கட்டும், "பூங்குயிலை நாம் மாங்குயில் என்று அழைக்கிருேமே? இதற்கென்ன காரணம்?" என்று அவள் அவனைக் கேட்டாள்.

அவன் அவளை நோக்கி, "பலாமரத்தின் நிழலில் படுத்துறங்கிட வேங்கைப்புலி விரும்புவதுபோல, பனை மடலில் கூடுகட்டிட, அன்றில் பறவை ஆசைப்படுவது போல, கருங்குயில் பெரும்பாலும் மாமரத்திலேயே தங்கி இருந்திட விரும்புவதால், நாம் அதனை மாங் குயில் என்று அழைக்கின்ருேம். இதனை அறிந்தே, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும், 'மாங்குயில்

கூவிடும் பூஞ்சோலை' என்று பாடியுள்ளார். 'ரூபச்சித்திர மாமரக்குயிலே' என்று மற்றொரு புலவரும் பாடியிருக்கிறார். குயில்கள் மாமரத்தில் தங்குவதால் நாம் அதனை மாங்குயில் என்றல்லவா அழைக்கிறோம். ஆனால் வட மொழியாளர்களோ, குயில் தங்குவதற்கு இடந்தரும் மாமரத்தைக் கோகில விருட்சம் என்று அழைக்கின்றனர்'' என்றான் அவன்.

அவள், அவனது தமிழறிவைப் பாராட்டினாள்.

அவன், அவளது தனியழகைப் பாராட்டினான்.

வழியில் இருவரும் ஒரு மரத்தடியில் நின்றனர். அவள் அவனை நோக்கி, "இது என்ன மரம், அசோக மரந்தானே? என்று கேட்டாள்.

''இது அசோக மரமல்ல, ஆச்சாமரம். தாய் வயிற்றிலிருந்து சோகமின்றிப் பிறந்த சக்கரவர்த்தி அசோகன், அசோகமரத்தின் நிழலில்தான் அடிக்கடி உலவுவானும். அவன் வளர்த்து வந்த அசோக மரங்களை, ஒருநாள் அரண்மனைப் பெண்கள் வெட்டி வீழ்த்தி விட்டார்களாம். அதனை அறிந்த அசோகன், உடனே அவர்களை வெட்டி வீழ்த்தும்படி கட்டளையிட்டானும்'' என்று அவன் அவளிடம் கூறினான்.

அதனைக் கேட்ட அவள் "அவ்வளவு கொடியவனா அவன்! அப்படிப்பட்டவனை நம்நாடு நல்லவன் என்று பாராட்டுகிறதே!'' என்றாள் அவள்.

"அவன் செய்த தீமைகளைவிட நாட்டுக்கு அவன் செய்த நன்மைகள் அதிகம். அதனால் அவனை உலகமே பாராட்டுகிறது'' என்றான் அவன்.

"அப்படியா! அதிருக்கட்டும், அவன் புன்னை மரங்களையும் தென்னை மரங்களையும் வளர்க்கச் சொல்லாமல்

அத்தி மரங்களையும், ஆலமரங்களையும் வைத்து, வளர்க்கச் சொன்னான் என்கிறார்களே, அது ஏன்?" என்று அவனைக் கேட்டாள்.

"ஒரு காலத்தில் நம்நாட்டுப் பெண்களுக்குப் பால் வற்றிப் போனாலும் போகலாம் எனக் கருதிப், பால் வரும் மரங்களாகிய அத்தி மரங்களையும் ஆலமரங்களையும் அவன் வளர்க்கச் சொல்லியிருக்கலாம் என நான் எண்ணுகிறேன்" என்றான் அவன்.

'நீங்கள் பெண்ணினத்தையே பழிக்கிறீர்கள்" என்றாள் அவள்.

"நான் அவர்களைப் பழிக்கவுமில்லை, வேண்டாமென்று கழிக்கவுமில்லை" என்று கூறிக் கொண்டே அவன் நடந்தான். அவளும் நடந்தாள்.

"சீர்காழி அருணாசலக் கவிராயரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்று அவன் அவளைக் கேட்டான்.

"நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" அவருடைய இராம நாடகக் கீர்த்தனைகளையும் நான் படித்திருக்கிறேன்" என்றாள்.

அப்போது அவன் அவளை நோக்கி, "அருணாசலக் கவிராயருக்கு, அசோகனைப் பற்றித் தெரியுமோ, தெரியாதோ, ஆனால் அசோக மரத்தைப் பற்றிய செய்திகள் அவருக்கு அதிகமாகத் தெரியும். அக் கவிராயர், மணலி சின்னையா முதலியார் வீட்டில் கம்பராமாயணச் சொற்பொழிவு செய்து கொண்டிருந்த போது, ஒருநாள் அம்முதலியார் கவிராயரை நோக்கி "இன்று தமிழிலும், வடமொழியிலும் வல்லவரான பூம்பாவைக் குழந்தை முதலியார் இவ்விடம் வருகைதர

இருப்பதால் தங்கள் சொற்பொழிவை இன்று நிறுத்தி வைத்தால் நலமாக இருக்கும் என்றாராம். அதனைக் கேட்ட கவிராயர் "அப்படிப்பட்ட மகாவித்வானுக்கு முன்பாகத்தான் அவசியம் பிரசங்கிக்க வேண்டும்" என்று கூறி—அன்று கம்பராமாயணம் சுந்தர காண்டத்தில் பொழிலிருந்த படலத்தில்—அசோக விருட்சம் இவ்விதமாக உற்பத்தியாயிற்றென்றும், அது, நெருங்கிய பசுமையாகிய இலைகளை உடைய தென்றும், காலை, மாலை முதலிய எந்த வேளையிலும் தன்னிழல் தன்னைக் காத்து நிற்குமென்றும், அந் நிழலின் கண் வந்தவர்களுடைய சோகத்தைத் தீர்ப் பதனால்—அதற்கு 'அசோகம்' என்று பெயர் வந்த தென்றும், பெண்கள் உதைத்தால் அது மலருமென்றும், அம்மலர் மன்மத பாணத்தில் ஒன்றென்றும், அது மன்மதனால் காமங்கொண்டவர்களுடைய கண்ணிற் பயன்படுத்தப்படுவதென்றும், அதுபோய் அவர் களுக்கு வெப்பத்தை விளைவிப்பதென்றும், அதன் நிறம் அக்கினி போல்வதென்றும், அதன் தளிர் காய்கனி களின் குணம் இன்னதின்னதென்றும். அம்மரம் இக் காலத்தில் இல்லை என்றும், காணக்கிடைக்காத அவ்வசோகமென்று வேறொரு மரத்தை வழங்கு கிறார்கள் என்றும், அசோக மரத்தின் கன்றுகளை இராவணன் ஒரு தீவிலிருந்து எடுப்பித்து வந்து, நாட்டி வனமாக வளர்ப்பித்தான் என்றும், அவ்வனத் திலேதான் சீதை சிறையிலிருந்தாள் என்றும் கூறினாராம்." இவ்விளக்கத்தைக் கேட்ட் குழந்தை முதலியார் வியப்புற்று நானிதுவரையில் இப்படிப் பிரசங்கித்தவர்களைக் கண்டதும், கேட்டதும் இல்லை என்று வியந்து கூறினாராம்," என்று சொல்லிக் கொண்டே நடந்தான். அவளும் நடந்தாள். நடந்து

செல்லும்போது அவள் சொல்லிக்கொண்டு வந்த கதையைக் கேட்டான். அதற்குப் பின்னர் அவளிடம் ஒரு கனியைக் கேட்டான். கேட்டவுடனே அவள், தன் வலக்கரத்தை அவனிடம் நீட்டினாள்.

"நான் உன்னிடம் கனியைக் கேட்டால் நீயோ உன் கரத்தை நீட்டுகிறாயே?" என்றான்.

"அன்றொரு நாள், "நீங்கள்தானே என் இடக் கரத்தை இன்சுவைக் கரும்பென்றும், வலக்கரத்தை வாழைப்பழம் என்றும் வர்ணித்தீர்கள். அதனால்தான் நீங்கள் கனியைக் கேட்டவுடன் நான் என் கரத்தை நீட்டினேன்" என்றாள்.

அவன் சிரித்தான்.

அவளும் சிரித்தாள்.

"பூவோ நல்லபூ—தொடுக்க முடியாது

முள்ளோ நல்லமுள்—எடுக்க முடியாது

அழைப்போ நல்ல அழைப்பு—போக முடியாது அது என்ன?" என்று அவன் அவளைக் கேட்டான்.

"அது எனக்குத் தெரியவில்லை" என்றாள் அவள்.

"தெரியாத ஒன்றை எனக்குத் தெரியவில்லை என்று, எளிதில் யாரும் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் நீயோ, உடனே ஒப்புக் கொண்டுவிட்டாய். இந்த நல்ல பண்பு வரவர நம்நாட்டில் வற்றிக்கொண்டேவருகிறது. உனக்கு உடனே புலப்படவில்லை என்றாலும், "உழைத்துப்பார், பின் அடுத்துக் கேள்" என்று கூறினான்.

அவள் சிறிதுநேரம் சிந்தித்தாள். அந்தப் புதிருக்கு விடை அப்போதும் அவளுக்குப் புலப்பட

வில்லை. பிறகு அவனை நோக்கி "இதற்கு விடை எனக்குத் தெரியவில்லை. நீங்களே சொல்லுங்கள் அத்தான்" என்ருள்.

உடனே அவன் "கொக்கரக்கோ" என்று கூவிக் காட்டினான்.

அவள் சிரித்துக் கொண்டே "சேவல்தானே" அது? என்று கேட்டாள்.

"ஆம்" என்ருன் அவன்.

"அத்தான் கோழியை ஞானியோடு ஒப்பிடுகின்ருர்களே அது ஏன்?" என்று கேட்டாள்.

"ஞானி, முதலில் தன்னை அறிந்து கொண்டு, தான் அறிந்தவற்றைப் பின்னர் இத்தரணிக்கு அறிவிக்கின்ருன். அதுபோலவே, கோழியும் முதலில் தான் விழித்தெழுந்து பின்னர் இத்தரணியில் உறங்குவோரையும் விழித்தெழச் செய்கிறது. எனவேதான் கோழியை ஞானியோடு ஒப்பிடுகின்றனர்" என்று கூறினான்.

மண்படாமல், கடல்நீரில் கண்படும் சூரியனை அவள் அப்போது உற்று நோக்கினாள். தீச்சினம் தணிந்த சூரியனை அவனும் உற்று நோக்கினான்.

"பெட்டைக்கோழி முட்டையிடுவதுபோல் இந்தச் சூரியனும், எப்போதோ ஒரு காலத்தில் ஒரு முட்டையிட்டதாம். அந்த முட்டைதான் இந்த உலகம் என்று பழங்காலத்தில் வாழ்ந்த பர்மிய மக்கள் நம்பி வந்தார்களாம்" என்று அவளிடம் கூறினான்.

"அப்படி என்ருல், அவர்களுக்கு இது 'கோழிச் சூரியன்', நமக்கெல்லாம் இது 'ஆழிச் சூரியன்' என்று அவள் கூறினாள்.

உடனே அவன் அவளை நோக்கி, "சற்றுமுன் அங்கே அந்தக் குயில் பாடியது. இப்போது இங்கே இந்தக்குயில் பாடட்டுமே" என்றான்.

சிலப்பதிகாரத்தில், காடுகாண் காதையில் வரும் சில அடிகளை அவள் இனிய பண்கலந்து பாடினாள். அவன் அதனைக் கேட்டு மகிழ்ந்தான். ஒன்று இரண்டு மூன்று முறை அவளைப் புகழ்ந்தான்.

சிலப்பதிகாரத்தில் நூற்றுமூன்று பண்களைப் பற்றிய செய்திகள் காணப்படுவதாக அவள் அவனுக்கு நினைவூட்டினாள்.

நமக்குத் திருமணமாகி இன்றோடு நூற்றுமூன்று நாட்கள் ஆகின்றன என்னும் மங்கலச் செய்தியை அவன் அவளுக்கு நினைவூட்டினான்.

அச்செய்தியைக் கேட்டதும் அவள் உள்ளம் தைத்திங்கள் தடாகத்து நீர்போல் குளிர்ந்தது. மணந்த நாளன்று வீங்கிய அவளுடைய தோள்கள் மறுபடியும் வீங்கின

அவன் அவளுடைய தோள்களைத் தொட்டான். அப்போது அவள், நெல்லின் முனையளவு தூரம் ஒரு காலைத்தூக்கி நிலத்தில் வைத்தாள். அப்போது அவனுடைய ஆசையோ, வில்லின் முனையளவு தூரம் விரிந்து சென்றது.

பிறகு அவளுடைய மனக்குறி கண்டு அவன் நகக்குறி வைத்தான்.

தகுதியற்ற இடத்திலிருந்து மவுனமாக விலகிச் செல்லும் ஓர் அறிஞனைப் போல அவளது ஆடையும், நாணமும் அவளைவிட்டு விலகின.

ஆலமரம் உறங்கிக் கொண்டிருந்தது. அடிமரத்தில் வண்டுகள் உறங்கிக் கொண்டிருந்தன. அவன் மடியில் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள்.

பராசர முனிவருக்கும் மச்சகந்திக்கும் சிறிய படகொன்று, படுக்கை அறையாகப் பயன்பட்டது போல, ஆதிக்கும் பகவனுக்கும் இலுப்பைத் தோப்பொன்று இன்ப விடுதியாக இருந்ததுபோல, அவனுக்கும் அவளுக்கும் அந்த மரகதச்சோலையே அப்போது மஞ்சமாகப் பயன்பட்டது.

---

# சுடாத இரவும் தொடாத உறவும்

ஞாயிற்றுக் கிழமை இரவில், திங்கள் வந்தது. தேய்ந்து வளர்ந்த அத்திங்களைக் கண்டு, செவ்வாய்த் தாமரைகள் அழுது கொண்டிருந்தன. அரக்காம்பல் என்னும் அல்லிகள் அப்போது சிரித்துக்கொண்டிருந்தன.

அந்த ஊரும், தடாகத்திலுள்ள நீரும்; கலப்பைகள் உழுதுவைத்த சேறும், இரவு நேரத்தில் ஒற்றுமையாக உறங்கிக் கொண்டிருந்தன. ஆனால், அவள் மட்டும் உறங்கவில்லை.

சுடாத இரவும், இரண்டு நாட்களாகத் தொடாத உறவும், அவளுடைய இளமை உணர்ச்சிகளை எழுப்பி விட்டதால், உள்ளத்தில் ஏக்கமும், ஏக்கம் வந்ததால் அவளுக்குத் தூக்கமும் வரவில்லை.

அக்காள் தங்கையோடு பிறக்காத அந்த அழகு நிலா, அப்போது அவள் வீட்டுக்கு நேராக வந்து, அவளுடைய பருவ முகத்தைப் பார்த்தது. அண்ணன் தம்பிகளோடு பிறந்த அவள், அந்த அழுக்கு நிலவை அண்ணாந்து பார்த்தாள்.

வெளிச்சத்தைக் கடன்வாங்கும் அந்த வெள்ளி நிலா, அப்போது அவளுக்குப் பனியையும் தந்தது. உள்ளத்தில் பிணியையும் தந்தது.

ஆசைக்கும் அச்சத்திற்கும் இடையே, அவள் தன் பெற்றோரை உற்று நோக்கினாள். அந் நள்ளிரவில் அவர்கள் இருவரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர்.

நல்ல சமயம், இதனை நழுவ விடக் கூடாது என எண்ணிக் கொண்டு, தன் காற் சிலம்புகளைக் கழற்றி ஓரிடத்தில் வைத்துவிட்டு, வெளியே புறப்பட்டாள்.

வழியில், நாயொன்று அவளைக் கண்டு குலைத்தது. அந்த நாயை விரட்டுவதற்காகத் தரையில் கிடந்த கல்லொன்றை எடுத்தாள். அது, தரையில் நன்றாகப் பதிந்திருந்ததால், அவள் எவ்வளவோ முயன்றும் அக்கல்லை எடுப்பதற்கு முடியவில்லை. இவ்வூரிலுள்ளவர்கள், மகா மடையர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால், இந்தக் கல்லைக் கட்டிப் போட்டு விட்டு நாயை அவிழ்த்து விடுவார்களா? என்று எண்ணிக் கொண்டே, அவள் விரைவாக நடந்தாள்.

மாவீரன் அலெக்சாண்டர் கி.மு. 326-ல் சிந்து நதியைக் கடந்து, தட்சசிலத்திற்கு வந்து சேர்ந்தானே அதுபோல, அவளுடைய அன்புக் காதலன் அந்த நள்ளிரவில், ஓர் ஆற்றைக் கடந்து, அடுத்துள்ள சிற்றூர் வழியாக ஓர் இலுப்பைத் தோப்புக்கு வந்து சேர்ந்தான். சிறிது நேரத்தில் அவளும் அங்கு வந்து சேர்ந்தாள்.

நெஞ்சிலே நின்றவன், அவள் நேரிலே நின்றான்.
நிலவிலே வெந்தவள், அவன் நிழலிலே நின்றாள்.

அவன் தன்மையாகவும்
அவள் முன்னிலையாகவும்
அவன் மோனையாகவும்
அவள் எதுகையாகவும் அப்போது இருந்தனர்.

"களைத்திருப்பவர்களுக்கு, வழி பெருந்தூரமாக இருக்கிறது" என்று அவன் சொன்னான்.

"விழித்திருப்பவர்களுக்கு இரவு மிகவும் நீண்டிருக்கிறது" என்று அவள் சொன்னாள்.

"இந்த நள்ளிரவில் நாம் மட்டும்தான் விழித்துக் கொண்டிருக்கிறோம்" என்றான்.

"ஏன்? நம்மைப் போலவே கள்வர்களும் விழித்துக் கொண்டிருப்பார்கள்" என்றாள் அவள்.

கள்வர்கள் விழித்துக் கொண்டிருப்பது—திருடுவதற்காக!

காதலர்கள் விழித்துக் கொண்டிருப்பது—தீண்டுவதற்காக!

திருடுவது குற்றமாகும்;

தீண்டுவது சுற்றமாகும் என்றான் அவன்.

"ஆரணங்கைத் தீண்டுவதும்

ஆண்டவனை வேண்டுவதும்—அவரவர் சுயநலத்திற்காகத்தான்" என்றாள் அவள்.

"அன்றாடம் நாம் சந்திப்பதும் அதற்காகத்தான்" என்றான் அவன்.

அவள் சிரித்தாள். அவளுடைய பல்வெளிச்சத்தைக் கண்டு, பால்நிலா வெளிச்சம் வெட்கப்பட்டது.

அவன், அப்போது அவளை நோக்கி, "இந்த நிலா வெளிச்சத்தில் நீ இப்போது மிகவும் அழகாக இருக்கிறாய்" என்றான்.

"இப்போது மட்டுமென்ன, நான் எப்போதுமே அழகாக இருப்பவள்தான். செம்பொன்னும், சிவந்த ரோஜாவும் எப்போதுமே அழகாகத்தானே இருக்கும் என்றாள்.

"உன்னிடம் தனமும் இருக்கிறது.

உன் பேச்சில் நூதனமும் இருக்கிறது.

உன் மலர்விழியில் மயக்கமும் இருக்கிறது. அதில் தேவையற்ற மையும் இருக்கிறது என்றான்."

"என்ன! தேவையற்ற மையா?" கண்ணுக்கு மையிடுவது தேவையற்றதா? என்று கேட்டாள்.

"ஆமாம்! உண்ணும் உணவுக்கு நெய் தேவை தான். மின்னும் கண்ணுக்கு மை தேவையா? பெண்கள் தங்கள் கண்களுக்கு மையிட்டுக் கொள்வது கவர்ச்சிக்காகவும், ஆண்களின் உள்ளங்களைக் கவர்வதற்காகவும் தானே" என்றான்.

"இல்லை! மங்கையர் மையிட்டுக் கொள்வது ஆண்களின் நன்மைக்காகவே அன்றி, அவர்கள் வாழ்வை நாசப்படுத்துவதற்காக அல்ல" என்றாள்.

"ஆண்களின் நன்மைக்காகவா மங்கையர் மையிட்டுக் கொள்கின்றனர்?"

"ஆமாம்! நச்சுத்தன்மையுள்ள வெப்பம், ஒரு பெண்ணின் உடலில் இருப்பதைவிட, அவளுடைய கண்ணில் அதிகமிருக்கிறது. அந்த வெப்பத்தைத்

தணிப்பதற்காகவே அவள் தன் கண்களுக்கு மை யிட்டுக் கொள்கிருள். அதனுல் அவனுடையகணவனுக் கும், அவளைச் சந்திக்கும் ஆண்களுக்கும் பரிகாரம் ஏற்படுகிறது. மை வைத்துக் கொள்ளா விட்டால் அந்த வெப்பம், ஆண்களின் உடல் நலத்தை அதிகமாக பாதித்துவிடும். அதனுல்தான் அவர்கள் மையிட்டுக் கொள்கின்றனர்'' என்ருள்.

''நீ ஒரு மருத்துவரின் மகளல்லவா? அதனுல்தான் இதைப் பற்றி நீ இவ்வளவு நன்ருகத் தெரிந்து வைத்திருக்கிருய். ஆமாம், உன் தந்தையை எல்லோரும் 'வயிற்றுவலி வைத்தியர்' என்று அழைக்கின்ருர்களே அது ஏன்? அவருக்கு அடிக்கடி வயிற்றுவலி வருவதுண்டோ?'' என்று கேட்டான்.

அப்போது அவள் அவனை நோக்கி ''வாதிடுவதில் மிகவும் வல்லவராக விளங்கிய அப்பைய தீட்சிதர் என்பவருக்குத்தான் அன்ருடம் நண்பகல் நேரத்தில் வயிற்றுவலி வருமாம். அவரைப் போல் என் தந்தைக்கு வயிற்றுவலியும் கிடையாது. வேறு வலிகளாலும் அவர் இதுவரை துன்புற்றதில்லை. பிறருக்கு வரும் வயிற்று வலியை அவர் குணப்படுத்துவதில் வல்லவர். அதனுல் தான் அவரை எல்லோரும் வயிற்றுவலி வைத்தியர் என்று அழைக்கின்றனர். என் தந்தையை மிகச் சாதா ரணமானவர் என்று நினைத்து விடாதீர்கள். அவர் ஒரு மருத்துவமேதை. அவருடைய தந்தையும் அவருடைய பாட்டனும் புகழ்பெற்ற மருத்துவர்களாக விளங்கிய வர்கள். ஜான் பஹ்டன் என்பவர், மன்னர் ஷாஜகான் மகளுக்கும், அஜீஸ்தீனே என்பவர், பஞ்சாப் மன்னன் ரஞ்சித் சிங்குக்கும், இங்கிலாந்து டாக்டர் எஸ்லி என் பவர், ராஜாராம் மோகன்ராய்க்கும், ஆலங்குடி

வேணுகோபால் நாயுடு என்பவர், அறிஞர் அரசஞ் சண்முகனருக்கும் மருத்துவம் பார்த்த மகா மேதாவி கள். அதுபோலவே வலயவட்டத்தில் வாழ்ந்த தனுக்கோடி வைத்தியர் என்பவர், மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கு வைத்தியம் பார்த்தவர். அவர் யார் தெரியுமா? அவர் என் முப்பாட்டன்.

ஷென்லுங் என்னும் சீன மருத்துவன் நூறு மூலி கைகளைத் தானே தின்று பார்த்து, அவை மருந்துக்கு நல்லவை என்று கண்டுபிடித்தானும். என் பாட்டனுரோ, ஆயிரம் மூலிகைகளைத் தின்றுபார்த்து அவற்றின் குணங்களைப்பற்றி அரியதோர் ஆராய்ச்சி நூல் எழுதியவர். அவர் டாக்டர் டி. எம். நாயரைப் போல் காது, மூக்கு, தொண்டை இவற்றைப் பற்றிய நோய் களைக் குணப்படுத்துவதிலும் வல்லவர். என் தந்தை யும் இந்த நோய்களைக் குணப்படுத்துவதில் வல்லவர். என் தந்தை எதிலும் நிதானமானவர். மிகவும் சிக்கன மானவர். அதுவேண்டும் இதுவேண்டும் என்று நான் அவரிடத்தில் கேட்டால், கேட்டவுடனே அவர் வாங்கித் தரமாட்டார் என்று கூறினுள்.

அதைக் கேட்டவுடன் அவன் அவளை நோக்கி, "பாலானது அவ்வளவு விரைவில் தயிராவதில்லை. உலகத்தில் பெரும்பாலோர் இப்படித்தான் இருக்கிருர் கள். ஏன்? நீயும் இப்படித்தான். நான் கேட்டால் நீ மட்டும் உடனே கொடுத்துவிடுகிருயா என்ன?" என்ருன்.

"நீங்கள் கேட்பது, உணவாக இருந்தால் நான், அதனை உடனே கொடுத்து விடலாம். நீங்கள் அடிக்கடி என்னிடம் ஒற்றடம் அல்லவா கேட்கிறீர்கள். ஒருபெண்

தன் உதடுகளை உடனே கொடுத்து விடலாமா?'' என்றாள்.

அதைக் கேட்டவுடன் அவன் சிரித்தான்.

இரவு பூத்திருப்பதைப், போல, இந்த இலுப்பை மரங்களும் பூத்திருப்பதைப் பாருங்கள் என்றாள் அவள்.

இளவேனிற் பருவம் வந்தால் இலுப்பை மரங்களும் பூக்கும். வரிநிறப் பாதிரி அரும்புகளும் வாய்திறந்து மலரும் என்றான் அவன்.

''ஆமாம்! பாதிரிமரம் என்று அம்மரத்தை நாம் அழைக்கிறோமே, நம் நாட்டுக்கு வந்த கிறித்தவப் பாதிரிமார்களில் யாரோ ஒருவர் அம்மரத்தைத் தம் தோட்டத்தில் வளர்த்ததால், அதற்கு அப்பெயர் வந்திருக்குமோ?'' என்று கேட்டாள்.

நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே! முருகையன் என்னும் பெயருடைய ஒருவன், தன்னுடைய கொல்லையில் ஒரு முருங்கை மரத்தை வளர்த்தால், அம்மரத்தை முருங்கை மரம் என்று அழைக்காமல் முருகையன் மரம் என்று அழைத்தால், அதனை யாராவது ஒப்புக் கொள்வார்களா? என்று அவன் அவளைத் திருப்பிக் கேட்டான்.

அப்போது அவளது மெல்லிய தோளின் மீது இலுப்பைப் பூ ஒன்று விழுந்தது. அவள் அதனை எடுத்துப் பார்த்துவிட்டு, ''இலுப்பைப் பூவுக்கு இரண்டு பக்கமும் ஓட்டை இருக்கிறதே'' என்றாள்.

இலுப்பைப் பூவுக்காவது, வாயிலும் வயிற்றிலும் ஓட்டை இருக்கிறது. இந்நாட்டில் பலருக்கு, முதுகிலும் மூளையிலும் அல்லவா ஓட்டைகள் இருக்கின்றன, என்றான்.

இப்படிப்பட்ட ஒட்டை மனிதர்களை நாம் வேட்டைக்கு அனுப்பினாலும், வெற்றியோடு திரும்பமாட்டார்கள். அவர்களைக் கோட்டைக்கு அனுப்பினாலும் அரசியலை அசிங்கப்படுத்தி விடுவார்கள் என்றான்.

அப்போது, அவர்களைக் கடந்து உடும்பு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட அவன், அவளை நோக்கி, "இதோபார் உடும்பொன்று ஓடுகிறது" என்றான். அவள் அந்த உடும்பைப் பார்த்தாள். அப்போது அவன் அவளிடத்தில்,

"உடும்பு நூறாண்டுகள் உயிரோடிருக்கும். பாம்பு ஆயிரம் ஆண்டுகள் உயிரோடிருக்கும். குளத்தில் போட்ட சேலை, எத்தனையோ ஆண்டுகள் அப்படியே இருக்கும்" என்றான்.

"இவற்றைப் போல் ஒருவன் நெடுங்காலம் வாழ்வதால் மட்டும் பயனில்லை. சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரைப் போன்றும், ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியைப் போன்றும், முப்பதாண்டுகளே இவ்வுலகத்தில் வாழ்பவனாக இருந்தாலும், அதற்குள் அவன் பல அரிய செயல்களைச் செய்பவனாக இருத்தல் வேண்டும். மேலை நாட்டில் பிறந்த மோசாத் என்னும் புகழ்பெற்ற பாடகன், தனது 9வது வயதிலேயே பெருங் கச்சேரிகளில் பாடத் தொடங்கிவிட்டான். பேஸ்கே என்பவன் 15வது வயதிலேயே சொற்பொழிவாற்றுவதில் சிறந்து விளங்கினான். வாஷிங்டன் இர்வின் என்பவன் 17வது வயதிலேயே பெரிய பத்திரிகையாசிரியனாகி விட்டான். அலெக்சாந்தர் 21வது வயதினிலேயே திக்விஜயத்திற்குக் கிளம்பிவிட்டான். வில்லியம் பிட் என்பவன், 24வது வயதிலேயே இங்கிலாந்தில் நிதியமைச்சராகப் பதவியேற்றான். இவர்களைப்

போன்று மக்கள் அரிய செயல் புரிதல் வேண்டும் என்ருள்.

அதனைக் கேட்ட அவன், அவளை நோக்கி, "அவர் களைப் போன்று அரிய செயல் செய்ய என்னுல் இயலா விடினும், சில உரிய செயல்களை என்னுல் செய்ய முடியும். ஜான் பன்வார்ட் என்னும் ஓவியன், மூன்று மைல் நீளமுள்ள துணியில் பெரிய ஓவியமொன்றை ஆறு வருட காலம் பாடுபட்டு அருமையாகத் தீட்டி ஞனும் அவனைப்போல் ஆறு வருட காலம் தொடர்ந்து ஓவியம் தீட்ட முடியாது என்ருலும், ஆறு வருட காலம் தொடர்ந்து உன்னை முத்தமிட முடியும். இது தான் என்னுல் முடிந்த அரிய செயல்" என்று சொல் லிக் கொண்டே அவளைத் தழுவுவதற்கு முயன்ருன். அவள் நாணத்தோடு நகர்ந்தாள். அவன் அவளுடைய கரத்தைத் தொட்டுத் தடவியபடி, "குறிஞ்சி பாடிய கபிலரின் கரங்கள் மிகவும் மெல்லியதாக இருந்ததெனச் சங்கப்பாடல் ஒன்றில் படித்தறிந்தேன். இப்போது உன் கரங்களைப் பிடித்தறிந்தேன்" என்ருன்.

"முடிவதற்கு முன் நடத்தும் முதல் ஒத்திகையா இது என்று அவள் கேட்டாள்."

குற்ருலக் குறவஞ்சியைப்போல் ஒரு குறவஞ்சியும், முக்கூடற்பள்ளுப்போல் ஒரு பள்ளும், வருணகுலா தித்தன் மடல்போல் ஒரு மடலும் கிடையாது. ஆடல் பாடல், அழகு இம்மூன்றும் ஒருங்கமைந்து விளங்கும் உன்னைப்போல் பேரழகு படைத்த பெண்ணும் இவ் வுலகில் கிடையாது. அழகுதான் பெண்களின் கையிருப்பு. நீ ஓர் அதிசயமான நெருப்பு. நீ பூக்களில் சிறந்த தாமரைப்பூ, அதுவும் எட்டாம் நாளில் மலரும்

தாமரைப்பூவன்று. முதல் நாளன்று மலரும் தாமரைப் பூ, என்றான்.

முதல்நாள் மலர்கின்ற தாமரையாக இருந்தாலென்ன? எட்டாம்நாள் மலர்கின்ற தாமரையாக இருந்தாலென்ன? இரண்டும் ஒன்றுதானே என்று கேட்டாள்.

இரண்டும் ஒன்றுதான் என்றாலும், அதன் மலர்ச்சியிலும் வளர்ச்சியிலும் பல மாறுதல்கள் இருக்கின்றன. "தாமரைமலர், எட்டு நாட்கள் வரையிலும், காலையில் மலர்ந்து, மாலையில் குவியும் இயல்புடையது. அதன் முதல்நாள் மலர்ச்சியிலேதான் தேனிருக்கும். மறுநாள் அதில் தேனிராது. அதுமட்டுமல்ல, அப்பூவிலுள்ள புறவிதழ்கள் ஒவ்வொருநாளும், ஒவ்வொன்றாகக் கருகும். நீ அப்படிப்பட்ட தாமரையல்லவே!" என்றான் அவன்.

"நீங்கள் என்னைப் புகழ்ந்தது போதும். இந்த ஆண்களே எப்போதும் இப்படித்தான். பெண்களைக் கண்டுவிட்டால், அவர்களைத் தம் வாய் வலியெடுக்கும் வரையில் வர்ணித்துக் கொண்டே இருப்பார்கள்" என்றாள்.

அடிக்கடி தன் உதடுகளால் அவள் உதடுகளைத் துடைத்துவிடுபவன், அப்போது அவளுடைய காய் மேடுகளையும், கனிமேடுகளையும் தொட்டான். அவள் அவனை நோக்கி, "திபேத்திய நாடோடிகள் குதிரை ஏறுவதிலும், குறிபார்த்துச் சுடுவதிலும் வல்லவர்கள். நீங்களோ, குறிப்பறிந்து நடப்பதிலும், குறிபார்த்துத் தொடுவதிலும் வல்லவர் என்று சொல்லிக்கொண்டே, நல்ல நல்ல மலர் போன்ற அவள் மெல்ல மெல்ல நடந்தாள்.

மெதுவாக நடந்தால், புல்கூட ஊசியைப்போல் குத்தும் என்று கூறிக் கொண்டே அவளை இறுகத் தழுவினான். அதனால் அவளுடைய கடைக்கண்கள் சிவந்தன. முத்தமிட்டான். அவளுடைய உதடுகள் வெளுத்தன.

கீழே திணை மயக்கம்.

மேலே இணை மயக்கம்

---

# காத்திருந்த குமரனும் கனிந்திருந்த குமரியும்

குறிஞ்சி! அங்கே உறுதியான குன்றுகளும், உயர்ந்தோங்கிய மலைகளும் உண்டு. அந்தக் கருங்கல் 'கொப்புளத்தில்', வேங்கை மரம் போன்றவனின் வீடுமில்லை; அம்மரத்தின் மீது படரும் மிளகுக்கொடி போன்றவளின் வீடுமில்லை.

முல்லை! அங்கே விதைகளின் வயிற்றில் பிறந்த மரங்களும், விலங்குகளின் வீடுகளாகிய காடுகளும் உண்டு. அந்தக் 'கோவலர் கோட்டத்தில்' காட்டாறு போன்றவனின் வீடுமில்லை; குளிர் தூங்கும் குறுஞ்சுனை போன்றவளின் வீடுமில்லை.

பாலை! அங்கே கண்களை ஏமாற்றக்கூடிய கானல் நீரும், பகற்பொழுதெல்லாம் காய்ச்சலோடு படுத்துக் கொண்டிருக்கின்ற பாதைகளும் உண்டு. அந்த "நெருப்பு நிலத்தில்" பாலையாழ் போன்றவனின் வீடுமில்லை. அந்த யாழில் பிறக்கும் பஞ்சுரப்பண் போன்றவளின் வீடுமில்லை.

நெய்தல்! அங்கே கதிரவன் முகம் பார்க்கும் கண்ணாடிக் கடலும்; காலில் மிதிபடும் நிலாநிற

மணலும் உண்டு. அந்த "ஈரத்தின் எல்லையில்" அன்றில் பறவை போன்றவனின் வீடுமில்லை. அன்னப் பறவை போன்றவளின் வீடுமில்லை

மருதம்! அங்கே ஏர் பரந்த வயலும், நீர் பரந்த கழனியும்; நெல் மலிந்த மனைகளும், சொல் மலிந்த மன்றங்களும் உண்டு. அந்த 'வண்டல் மண்டலத்தில்' தான் அவன் வீடும் இருந்தது. அவள் வீடும் இருந்தது.

அவள் வீடு, மிகச் சிறிய வீடு. வைக்கோல் வேய்ந்த வீடு. அது', இரண்டு தங்கத் தகடுகள் ஒன்றோ டொன்று மோதிக் கொண்டிருப்பதுபோல் இருந்தது.

அவன் வீடு ஈச்ச மரத்தின் இலைகள் வேய்ந்த வீடு. அது, ஒரு முள்ளம்பன்றி எழுந்து நின்று கொண்டி ருப்பதுபோல் இருந்தது.

அவன், இருபது நூற்றாண்டுகளில் இரண்டு நூற்றாண்டுகளைப் போன்றவன். அதாவது, வள்ளுவர் பிறந்த நூற்றாண்டையும் கரிகாற்சோழன் பிறந்த நூற்றாண்டையும் போன்றவன்.

பன்னிரண்டு போர்களுள் இரண்டு போர்களைப் போன்றவன். அதாவது, தலையாலங்கானத்துப் போரையும் வெண்ணிப் போரையும் போன்றவன்.

அவள், ஆறு பருவங்களுள் இரண்டு பருவங்களைப் போன்றவள். அதாவது, இளவேனிற் பருவத்தையும் கார்ப்பருவத்தையும் போன்றவள்.

ஏழு நாட்களுள் இரண்டு நாட்களைப் போன்றவள். அதாவது, திங்களும் செவ்வாயும் போன்றவள்.

நால்வகைப் பூக்களில் இருவகைப் பூக்களைப் போன்றவள். அதாவது, கோட்டுப் பூவையும் கொடிப் பூவையும் போன்றவள்.

அவள பிறந்த ஊர் இராதா நல்லூர். திருவருணைக் கலம்பகம் பாடிய சைவ எல்லப்ப நாவலர் பிறந்த ஊரும் அதுதான்.

அவரும், அந்த அழகியும் ஒரே ஊரில் பிறந்தவர்கள் என்றாலும், இருவரும் ஒரே நேரத்திலோ, ஒரே நூற்றாண்டிலோ பிறக்கவில்லை.

அந்த நேரிசை நாவலர், சுட்டுப் பொசுக்கும் பகல் நேரத்தில் பிறந்தவராம். அந்த மருதநிலத்து மங்கையோ, சுடாத இரவிலே பிறந்தவளாம்.

பெற்றோரின் உறவில் உருவாகி, இரவில் பிறந்த அக்கட்டழகி, பிறக்கும்போது அழுது கொண்டே பிறந்தவள் என்றாலும், வளரும்போது அன்றாடம் சிரித்துக் கொண்டே வளர்ந்தாள்.

'மழவும் குழவும் இளமைப் பொருள' என்று தொல்காப்பியம் கூறுவதுபோல, அவள் கொழுந்துக் குழந்தையாக இருக்கையில், தொட்டிலிலும்பெற்றோரின் தோள்மீதும் வளர்ந்தாள். புல்லும் பொறுமையும் மிக விரைந்து வளர்வதைப்போல, அவள் வளர்ந்து கொண்டே வந்தாள்.

தன் அங்கத்தைத் தங்கமாக்கிக் கொண்டு, சிவந்த தோல்மேடுகளைச் செவ்விளநீராக்கிக் கொண்டு, ஒரு நாள் அவள் ஒரு கொக்கோகக் குமரியானாள்.

தொட்டில் பருவத்தில் உதடுகளால் உரையாடி வந்தவள், கட்டில் பருவம் வந்தபின், தன் கண்களால் பேசத் தொடங்கினாள்.

எதிர்வீட்டு இளைஞன் ஏகாம்பரம், அவளைக் காணும் போதெல்லாம் அவளிடம் தன் கண்களால் பேசிவந்தான்.

ஓசை வெளிப்படாத பார்வைப் பேச்சும், அவர்கள் அன்றாடம் விட்டுவந்த பெருமூச்சும், நாளடைவில், உறவை உருவாக்கி, இரவை இனிக்க வைத்தன.

காத்திருந்த குமரனும், கனிந்திருந்த குமரியும், குயில்கூவும் சோலையில் ஓர்நாள் இரவு, கூட்டல் குறியாயினர்.

பெற்றோர்கள் அவளைப் 'பெருந்தேவி' என்று அழைத்துவந்தனர். தோழிப் பெண்களோ, அவளைத் 'தொட்டால் சுருங்கி' என்று அழைத்து வந்தனர். அவளுடைய காதலனோ அவளை 'அகவல் நாயகி' என்று அழைத்து வந்தான்.

பகல் நேரத்தில், அவன் அவளைப் பார்த்துக் கொண்டே போவான்.

அன்றொரு நாள்,

பகலின் பங்காளியாகிய இரவு நேரம்.

முதலில் பிறையாக இருந்து, மூவைந்து நாட்களில் முறையாக வளர்ந்து, முற்றுப்பெற்ற முழுநிலா,அன்று முதலில் வந்தது. முக்காடு போடாத முழுநிலா வந்த பிறகு, ஆற்றங்கரைக்கு அவன் வந்தான். சிறிது நேரத்தில், அவளும் அங்கே வந்தாள்.

அவள் அங்கு வந்தவுடன், அவளைப் பார்த்து "தங்கச்சிவந்தியா? என்று அவன் கேட்டான்.

உடனே அவள் "நான் உங்களுக்குத் தங்கச்சியா?" என்று கேட்டாள்.

"உன் அண்ணனுக்கு நீ தங்கச்சி என்பதும், இந்தக் கண்ணனுக்கு நீ ஒரு தங்கச்சிலை என்பதும் எனக்குத் தெரியாதா? இப்போது நீ உன் தலையில் சூடியிருக்கும்

இந்தமலர் தங்கச் சிவந்தியா? என்றுதான் கேட்டேன்'' என்று கூறினான் அவன்.

அதைக் கேட்டவுடனே அவள், ''அத்தான் நீங்கள் ஒரு கல்விக் கிரகம்'' என்று கூறினாள்.

' என்ன! நான் கல் விக்கிரகமா?'' என்று வியப்புடன் கேட்டான்.

''நீங்கள் கல் விக்கிரகம் அல்ல, 'கல்விக் கிரகம், அதாவது, கல்விக் கிருப்பிடம்'' என்றாள்.

கரும்பின் பக்கத்திலே நெற்கதிரும்,
கவரிமான் பக்கத்திலே கலைமானும்,
வளையலின் பக்கத்திலே ஒரு வைர மோதிரமும்,
வல்லினத்தின் பக்கத்திலே மெல்லினமும்'

கவிதையின் பக்கத்திலே ஓர் இலக்கியக் கட்டுரையும் இருந்தால் எப்படி இருக்குமோ, அப்படி அவர்கள் இருவரும், அப்போது நெருங்கி நின்று கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த வஞ்சியின் முகத்தைப் பார்த்து விட்டு, அந்த வான்நிலவை அவன் பார்த்தான். அவளுடைய அழகான விழிகளைப் பார்த்துவிட்டு, ஆற்று மீன்களை அவன் பார்த்தான். அவள் அவனுடைய திரண்ட தோள்களைப் பார்த்துவிட்டு, குன்றுகளையும் மலைகளையும் கூர்ந்து பார்த்தாள்.

கொப்புளம் கொண்ட குளிர்ந்த வானத்தில், அப்போது ஊமைநிலா ஊர்ந்து கொண்டிருந்தது. புலால் நாற்றமில்லாத விண்மீன்கள், கருநீல வானத்தில் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. அவனும் அவளும், தங்கள் கண் வெளிச்சத்தை அந்த விண்வெளிச்சத் சத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தனர்.

அவள் அவனை நோக்கி "அத்தான்! பகல் நம்மைப் பிரித்து வைக்கிறது. இரவுதான் நம் இருவரையும் இணைத்து வைக்கிறது" என்று கூறினாள்.

"ஆமாம்! அந்தப்பகல், நம்மிருவரையும் ஒரு கண்ணால் பார்க்கிறது. இந்த இரவுதான், ஆயிரம் கண்களால் நம்மை அன்றாடம் பார்க்கிறது" என்றான் அவன்.

ஆம் அத்தான்! இரவுக்கு ஆயிரம் கண்கள்.

பகலுக்கு ஒன்றே ஒன்றுதான் என்றாள் அவள்.

"இரவுக்கு மட்டுமா ஆயிரம் கண்கள், இந்திரனுக்கும் ஆயிரம் கண்கள்தான். பகலுக்கு மட்டுமா ஒரு கண், பஞ்சாப் மன்னன் ரஞ்சித்சிங்குக்கும் ஒரே ஒரு கண்தான்" என்றான் அவன்.

அப்படியா! அதோ பாருங்கள், அந்தப் பன்னிரண்டு நட்சத்திரங்களும் ஒரு படகைப்போல் இருக்கிறதல்லவா? என்று கேட்டாள்.

"ஆமாம்" அதைத்தான் ரேவதி நட்சத்திரம் என்று சொல்லுவார்கள் என்றான் அவன்.

ஆறு நட்சத்திரங்கள் ஒன்று சேர்ந்துள்ள அசுவினி நட்சத்திரத்தை அவள் உற்றுப் பார்த்தாள். பார்த்து விட்டு அவனை நோக்கி "கௌதம புத்தரும், பெரியாழ்வாரும் அசுவினி நட்சத்திரத்தன்றுதான் பிறந்ததாகச் சொல்லுகிறார்கள்" என்றாள்.

பிறந்திருக்கலாம். யார் எந்த நட்சத்திரத்தில் பிறந்தாலென்ன? ஒருவன் மற்றொருவனுக்கு எரி நட்சத்திரமாக இருக்கக் கூடாது" என்று கூறினான் அவன்.

அந்த அசுவினி நட்சத்திரம் குதிரையின் தலை போல் இருக்கிறதல்லவா என்று கேட்டாள்.

ஆமாம், அதன் வடிவம் அப்படித்தான் இருக்கிறது. நீ குதிரையை நினைவு படுத்தியவுடன், எனக்கு இப்போது, குதிரை வெறியன் ரஞ்சித்சிங் நினைவு வருகிறது.

பஞ்சாப் மன்னன் ரஞ்சித்சிங் ஒரு குதிரை வெறியன். 'லைலி' என்னும் பெயருடைய குதிரை ஒன்று பிஷாவர் நாட்டு மனனனிடம் இருப்பதாக அவன் கேள்விப்பட்டு, அக்குதிரையைத் தனக்குக் கொடுக்கும்படி அம்மன்னனிடம் கேட்டானும். பலமுறை கேட்டும் அவன் கொடுக்க மறுக்கவே, உடனே அந்நாட்டின் மீது படையெடுத்து அவனைச் சிறையிலடைத்துவிட்டு ரஞ்சித்சிங் அக்குதிரையைக் கொண்டு வந்தானும். அவன் அக்குதிரைக்கு விலையுயர்ந்த அணிகலன்களைப் பூட்டி, அதன் கால்களில் தங்க வளையம் போட்டு ஊர்வலமாகத் தன் அரண்மனைக்கு அக்குதிரையைக் கொண்டு வந்தானும். அவன் அக்குதிரையை அடைவதற்காக அறுபது லட்ச ரூபாய் செலவழித்தானும். அந்தப் போரில் பன்னிரண்டாயிரம் மக்கள் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது'' என்றான் அவன்.

அதனைக் கேட்டவுடன் அவள், "மண்ணுக்காகவும், பொன்னுக்காகவும் அழகான பெண்ணுக்காகவும்தான் மன்னர்கள் போரிடுவார்கள். ஆனால் இவனோ, ஒரு குதிரைக்காக இத்தனை பேரைக் கொன்று குவித்திருக்கிறானே இந்தக் கொடியவன்'' என்றாள் அவள்.

"ஆம்! அவன் கொடியவன்! நீயோ கொடியவள்'' என்றான் அவன்.

"என்ன நான் கொடியவளா?'' என்று கேட்டாள்.

"ஆம்! கொடியவள்தான்! நீ ஒரு பெண்தானே'' என்று அவளைக் கேட்டான்.

"ஆமாம். இதிலென்ன சந்தேகம். நானும் ஒரு பெண்தான்" என்றாள்.

அவன் அவளைப் பார்த்து "பெண் என்பவள் யார்? கொம்பைத் தழுவும் ஒரு கொடி போன்றவள் தானே" என்றான் அவன்.

"நான் ஒரு கொடி என்றால், நீங்கள் ஒரு கொம்பு தானே" என்று கேட்டாள்.

"ஆம்! நான் ஒரு கொம்புதான்" என்றான்.

அதனைக் கேட்டவுடன், அவள் உடனே அவனிட மிருந்து விலகிச் சென்றாள்.

அவன் அவளைப் பார்த்து, "நீ என்னை விட்டு ஏன் விலகிச் செல்கிறாய்?" என்று கேட்டான்.

"கொம்புள்ள விலங்கைக் கண்டால் ஐந்து முழமும். குதிரைக்குப் பத்து முழமும் விலகிச் செல்ல வேண்டும்; என்பார்கள். கொம்பின் அருகில் நானிருந்தால் அது என்னைக் குத்திவிடுமே என்று அஞ்சிதான் விலகிச் செல்கிறேன்" என்று கூறினாள்.

"என்னைத் தொடாமலும், எச்சில் படாமலும் தப்பித்துக் கொள்வதற்காகத்தான் இந்தத் தந்திரமா?" என்று கூறிக்கொண்டே அவளருகில் சென்றான்.

அதிக வெளிச்சமில்லாத இடத்தில் போய் அவள் நின்றாள்.

எமிலி ஜோலா என்ற எழுத்தாளன், எழுதத் தொடங்கினால், அதிக வெளிச்சமில்லாத இடத்தில் அமர்ந்துதான் எழுதுவானாம். இந்த இடம், அவனைப் போன்ற எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல, நம்மைப்

போன்ற இளங்காதலர்களுக்கும் மிகவும் ஏற்ற இடந் தான்" என்ருன் அவன்.

"ஒரே இடத்தில் தங்கியிருப்பதைவிடச் சுற்றி வளைந்து செல்லும் பயணம் மிகச் சிறந்தது. ஆற்று நீர் அதைத்தான் செய்கிறது" என்ருள் அவள்.

"ஆற்று நீர் அதை மட்டுமா செய்கிறது. அது, சில சமயம் அழிவையும் ஏற்படுத்தி விடுகிறது. மூன்ரும் குலோத்துங்கன், ஆட்சிக்கு வந்த 6 ஆம் ஆண்டில் விக்கிரம சோழப் பேராறு, பெரும் பெருக் கெடுத்துப் பற்பல கோவில்களுக்கும் மக்களுக்கும் சொந்தமாயிருந்த நிலங்களை அழித்துவிட்டது" என் ருன் அவன்.

அப்போது அவள் அவனை நோக்கி, "மக்களுக்குச் சொந்தமான நிலங்களைத்தானே அது அழித்தது? அவ்வூர் மக்களை அது அழிக்கவில்லையே" என்ருள்.

"அளவுக்கு மீறிப் பெருகிவரும் ஆற்று வெள்ளம் ஊரிலுள்ள நிலங்களை அழிக்கும்போது, அவ்வூரில் வாழும் மக்கள் பலரை அழிக்காமல் விட்டிருக்குமா என்ன?

கருணையும், இரக்கமும் மக்கள் உள்ளத்திற்கு உண்டேயன்றி, ஆற்று வெள்ளத்திற்குக் கிடையாது. அது, ஏழையென்றும், எளியவரென்றும், அரச னென்றும், ஆண்டியென்றும தொட்டில் ' குழந்தை யென்றும், கட்டில் காதலரென்றும் பார்ப்பதில்லை. அக்பரின் அரண்மனைப் புலவஞக விளங்கிய ஜகந்நாத கவியும், அவன் காதலியாகிய அக்பரின் மகள் லவங்கியும், ஒருநாள் கங்கை நதியின் 52 வது படிக் கட்டில் அமர்ந்து, உல்லாசமாக உரையாடிக் கொண்டி

ருக்கையில் திடீரென்று கங்கை நதி பெருக்கெடுத்து அவர்கள் இருவரையும் இழுத்துக் கொண்டு சென்று விட்டதாம்''. என்று கூறினான் அவன். அத்துயரச் செய்தியைக் கேட்ட பூங்கோதை,

''ஐயோ! பாவம். அந்த இளங்காதலர்களின் முடிவு இப்படியா ஆகவேண்டும்? மன்னர்களும் மகாகவிகளும் காலமாவதற்குக் காரணமாக இருக்கும் அக் கங்கை நதிக்கு அந்த மொகலாயச் சக்ரவர்த்தி மரண தண்டனை அல்லவா விதித்திருக்க வேண்டும்?'' என்றாள் அவள்.

''மற்றொருவனைக் கொன்றவனுக்கு மரண தண்டனை விதிக்கலாம். மலைக்கும் மடுவுக்கும், ஆற்றுக்கும் காற்றுக்குமா மரண தண்டனை விதிக்க முடியும்?'' என்றான் அவன்.

''ஏன் விதிக்க முடியாது? அக்காலத்து மன்னன் ஒருவன் ஆற்றுக்கு மரண தண்டனை விதித்திருக்கிறானே!'' என்றாள் அவள்.

''அப்படியா?'' என்றான் அவன்.

''ஆமாம்! பாரசீக மன்னன் ஒருவன் ஒரு சமயம் தன் குதிரை மீது ஏறி ஆற்றைக் கடந்த போது, அவன் குதிரையை அந்த ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விட்டதாம். அடங்காத கோபங் கொண்ட அம்மன்னன் அவ்வாற்றுக்கு மரண தண்டனை விதித்தானாம்! எப்படித் தெரியுமா? ஏராள மான கால்வாய்களை வெட்டி, ஆற்று நீரை வடித்து விட்டானாம். அந்த ஆறு, நீர் இல்லாமல் செத்து விட்டதாம்!'' என்றாள் அவள். அச்செய்தியைக் கேட்டதும் அவன் அவளைப் பார்த்து,

''விசித்திரமான வேந்தன்;

விநோதமான மரண தண்டனை, அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்.

"நீ வா! அந்த வாகை மரத்தடிக்குப் போகலாம்" என்றான் அவன்.

அவள் எழுந்து மெல்ல நடந்தாள். அவள் அவனைத் தொடர்ந்தாள்.

அவனும் அவளும், உரையாடிக் கொண்டே அவ்விடம் சென்றனர்.

அவன் அவளை நோக்கி, "அன்பே, இப்போது நான் தான் உனக்கு அதியமான். நீ தான் எனக்கு இப்போது ஔவை" என்றான்.

"இருக்கலாம்! ஆனால் அவளைப் போல் நான் கள் குடிப்பதில்லையே" என்றாள்.

"அப்படி யென்றால் நீ எனக்கு வாய்த்த இரண்டாவது ஔவை" என்றான்.

"தேசத்தைப் பற்றிப் பாடுவேனே யன்றி, அவளைப் போல் நான் தெய்வத்தைப் பற்றிப் பாட மாட்டேனே" என்றாள்.

அவன், அவளுடைய பகுத்தறிவுக் கொள்கையைப் பாராட்டினான்.

"அத்தான்! கரிகால் பெருவளத்தான் காலத்தில், சாரமா முனிவன் என்பவன் நாகருலகம் சென்று, செவ்வந்திமலர் கொண்டு வந்தானும். சூரவாதித்தன் என்பவன், நாகருலகம் சென்று, வெற்றிலையைக் கொடியைக் கொண்டுவந்தானும். சீன அரசாங்கத்தின் தூதுவனாகிய சாங்சங் என்பவன், ஒக்கஸ் நதிக் கரையில் வாழ்ந்த சிதியர் என்னும் இனத்தாரிடமிருந்து

திராட்சைப் பழங்களையும், மாதுளம் பழங்களையும் சீன நாட்டுக்குக் கொண்டு வந்தாளும். நீங்கள் பொன் விளைந்த களத்தூருக்குப் போய் வந்தீர்களே, அங்கே எனக்கென்ன வாங்கி வந்தீர்கள்," என்று கேட்டாள்.

"நான் பொன் விளையும் களத்தூருக்குப் போயிருந்தால், உனக்குப் பொன் வளையல் வாங்கி வந்திருப்பேன். எப்போதோ ஒருகாலத்தில் பொன்விளைந்த களத்தூருக்கல்லவா நான் போயிருந்தேன். இப்போதங்கே பொன்னும் விளையவில்லை. உனக்குப் பொன் வளையலும் வாங்கி வரவில்லை! வெற்றிலை வாங்கிக் கொண்டு வரலாமா என்று நினைத்தேன். அதை நான் வாங்கிக் கொண்டு வந்தால் இந்த இலை 'வெற்று இலை'தானே என்று நீ சொல்லி விடுவாய் என்பதனால், அதை நான் வாங்க விரும்பவில்லை. என்றான்"

"எனக்கு வேறு, என்னதான் வாங்கி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"உள்ளே சொருவுறது வாங்கி வந்திருக்கிறேன்" என்றான் அவன்.

"உள்ளே சொருவுறதா? அது என்ன" என்று கேட்டாள்.

"அது தான் கொண்டை ஊசி" என்று கூறி, அதனை அவளிடம் கொடுத்தான். அவள் அதனை வாங்கித் தன் கொண்டையில் செருகிக் கொண்டிருக்கையில், அவன் அவளைப் பார்த்து,

"பாரசீக மக்கள் மாதுளம் பூவையும்;

பிரெஞ்சுக் காரர்கள் ரோஜாப் பூவையும்;

ஆங்கிலேயர்கள் செர்ரி மலரையும்;

கிரேக்கர்கள் ஒலிவ மலரையும்;
உரோமானியர்கள் முந்திரி மலரையும்
மிகவும் விரும்புவார்களாம்'' என்றான் அவன்.

"ஆனால், நாதா, கவர்ச்சிமிக்க கனகாம்பரத்தை விடக் காயாம் பூவைத்தான் மிகவும் விரும்புவேன்'' என்றாள் அவள்.

''ஓகோ! விரைவில் நீ ஒரு தாயாக விரும்புவதால் தான், காயாகும் பூவாகிய அந்தக் காயாம்பூவை விரும்புகிறாய் போலிருக்கிறது'' என்றான் அவன்.

அவள் புன்னகை புரிந்தாள்!

இலைகள் உண்டாக்கிய இருட்டில், அவர்கள் இருவரும் நெருங்கி நின்று, தங்கள் கரங்களைச் சேர்த்தனர். ஒருவரை ஒருவர் போர்த்தனர். சிறிது நேரத்தில் இருவரும் வேர்த்தனர்.

# அவள் அங்கமும் தங்கம்
# அவள் பெயரும் தங்கம்

அவள் ஒரு சேற்றுத் தாமரை; கீற்றுநிலா; ஆற்றுப் படகு, ஐந்தெழுத்துக் கதம்பம்; ஆறுகால் வண்டு; ஈரமேகத்தில் தோன்றும் ஏழு நிறங்களைக் கொண்ட வானவில்.

பச்சை வாழை தன் பக்கத்தில் இருந்தால், அப்போது மதிப்பு மிக்க மரகதம் போலவும்; செருந்திப்பூ அருகில் இருந்தால், செம்பொன் போலவும்; மலர்ந்த செந்தாமரை அருகில் இருந்தால், மாணிக்கம் போலவும், தோற்றம் அளிக்கக் கூடிய ஒரு பளிங்குக் கல் போன்றவள் அந்தப் பரத்தை.

அவள் ஒரு பணப்பெண்!

அவள் ஒரு பருவப்புன்னை!

அவள் அங்கமும் தங்கம். அவள் பெயரும் தங்கம். தன் தனம் கொடுக்க பிறரிடம் தனம்..கேட்கும் ஒரு தாய்விலாசக்காரி. தன் தாயின் எச்சிலில் பிறந்து, தன் வாயின் எச்சிலுக்கு விலைகேட்கும் ஒரு வலை மாது.

புலியின் பற்கள் வளைந்திருப்பதால், அது தன் வாயை மூடும்போது மேல் வாய்ப்பற்களும் கீழ்வாய்ப் பற்களும் நன்ருகப் பொருந்தி பற்றிக் கொள்ளும். அவ்வாறு பற்றிக்கொள்ளும் பற்களை விரைவில் கழற்றுவதென்பது கடினம். அது போலவே அவளுடைய பார்வைப் பேச்சிலும் வேர்வை வெப்பத்திலும் அகப்பட்டுக் கொண்டவர்கள், அவ்வளவு எளிதில் மீண்டுவர முடியாது.

இளவேனிற் பருவத்தில் ஒருநாள்

ஈர நிலா, தன் இரவல் வெளிச்சத்தை வழங்கும் இரவு நேரம். அந்த நாள் முதல் இந்நாள் வரையில் தன் முழு உடலைக் காட்டாமல், முகத்தை மட்டுமே காட்டி வரும் உருண்டை நிலா, அந்த ஊமை வானத்தில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது.

நிலா முற்றத்தில் நின்றபடி, அவள் அந்த நிலவை, அந்த அந்தி நிலவைக்கூர்ந்து நோக்கினுள். நோக்கித் தன் விளம்பரவிழிகளைத் தொங்கும் நிலவின் மீது தேக்கி—

"நிலவே! நிலவே! சற்று நில்!" என்ருள். அது நிற்கவில்லை. "இங்கே வா! என் இல்லத்திற்கு வா" என அழைத்தாள்.

ஆதி காலத்துச் சீதை அழைத்தும், சூடிக் கொடுத்த கோதை அழைத்தும், வராத வெண்ணிலா, அந்தப் பேதை அழைத்தும் வரவில்லை. மீண்டும் அவள் அந்த நிலவைப் பார்த்து,

நிலவே! மக்கள் நடந்து செல்லுவதற்கு மண்ணில் தான் பாதைகள் இருக்கின்றன. விண்ணில் பாதைகளே இல்லை. இருந்தால், என் வீட்டுக்கு நீ வராவிட்டாலும், உன் வீட்டுக்கு நான் வந்திருப்பேன்.

கன்னான் உருக்கிய வெங்கலத்தைப் போன்று
காயும் நிலவே!

பூமியின் நிழல் உன்மீது படுகிறது. அதைக் களங்கம் என்கிறார்கள். உன் நிழல், என் தலையின் முன்பக்கம் படுகிறது. அதை முகம் என்கிறார்கள்.

உன் வியர்வைத்துளி, புல்லின் நுனியில் படுகிறது. அதைப் பனித்துளி என்கிறார்கள். என் வாயின் எச்சில் வாலிபர்களின் மீது படுகிறது. அதைத் தேன்துளி என்கிறார்கள்.

நீ இந்த மலையின் முடியில் படுக்கிறாய்.
நானோ பொருள்தருவோர் மடியில் படுக்கிறேன்.
நீ பகலில் பதுங்கிக் கொள்கிறாய்.
நானோ, பகலில் ஒதுங்கிக் கொள்கிறேன்.
நீ, கடலில் குளிக்கிறாய்.
நான், காவிரியில்குளிக்கிறேன்.
நீ, பதினைந்து நாட்களில் பருவமடைந்தவள்.
நானோ, பதினைந்து வயதில் பருவமடைந்தவள்.
உலகில் நீ, எல்லோருக்கும் பொதுவுடமை.
நானும் எல்லோருக்கும் பொதுவுடைமை.
நீ, எண்ணெயின்றி எரியும் விளக்கு.

நானோ, எண்ணெய் இருக்கும் வரையில் மட்டுமே எரியும் விளக்கு!

கார்காலத்தில், உழவர்கள் நொச்சி இலையைத் தம் தலையில் சூடிக் கொள்வார்களாம், வெப்பத்திற்காக!

நானோ வாலிபர்களையே போர்வையாகப் போர்த்திக் கொள்கிறேன், வெப்பத்திற்காக.

குரங்கு என்னும் சொல்லுக்கு
வளைந்திருப்பது என்பது பொருள்.

வானரத்தின் உடல் வளைந்திருப்பதால், நாங்கள் அதைக் குரங்கு என்று அழைக்கின்றோம்.

நீ பிறையாக இருக்கும் போது, உன் உடலும் வளைந்து காணப்படுவதால், உன்னைக் குரங்கி என்று ஆராய்ச்சியாளர்கள் அழைக்கின்றனர். இந்த உலகத்தில், நீ தான் முதன் முதலில் தோன்றிய வாலில்லாக குரங்கு.

உனக்கு மட்டும் வாலிருந்திருக்குமானால், இங்கிருக்கும் அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் போட்டி போட்டுக் கொண்டு உன்வாலப்பிடிக்க வந்திருப்பார்கள்" என்று, தன் எச்சில் வரலாற்றை அந்த ஈர நிலாவினிடத்தில் அவள் சொல்லிக் கொண்டிருக்கையில், அடுத்த வீட்டுக்காரி ஊசி என்பவள் அப்போது அங்கே வந்தாள். வந்தவள் அவளைப் பார்த்து—

''என்னடியம்மா! உன்னைத் தேடி வந்திருக்கும் வாலிபர்களை வர்ணிக்காமல், வானத்து வெண்ணிலவை வர்ணித்துக் கொண்டிருக்கிறாய்'' என்றாள்.

தாசி தங்கம் அவளைப்பார்த்து, ''பொன்னைப் பார்க்கும்போது, நகைகளைப் பற்றிய நினைவு நமக்கு வருகிறது. பூவைப் பார்க்கும்போது பூமாலையைப் பற்றிய நினைவு நமக்கு வருகிறது. அதுபோலவே இந்த நிலவைப் பார்த்தவுடன் எனக்கு இதன் வரலாறும், என் வரலாறும் நினைவுக்கு வந்தது. அதனால், என் கதையை மிகச் சுருக்கமாகவும் சுவையாகவும் இதனிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். இன்று நான் எழுதிய புதிய கவிதை ஒன்றை இந்தப்

பழைய நிலாவிடத்தில் பாடிக்காட்டலாம் என்றிருந்தேன். அதற்குள் நீ வந்துவிட்டாய். நான் எழுதிய புதிய கவிதையைப் படிக்கிறேன். கவனமாகக் கேட்கிறாயா? என்றாள். அவள் "கேட்கிறேன் சொல்" என்றாள்.

தாசி தங்கம், தான்எழுதிய கவிதையை அவளிடம் படித்துக் காட்டினாள். பாடலைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த ஊசி என்பவள் தாசி தங்கத்தை நோக்கி,

"எண்ணல், எழுதல், இலை கிள்ளல், பூத்தொடுத்தல், யாழ் வாசித்தல் ஆகிய ஐந்து தொழில்களிலும் நீ மிகவும் வல்லவள் என்பதை நான் முன்பே அறிவேன். ஆனால், நீ இவ்வளவு அருமையாகக் கவிதை எழுதக் கூடியவள் என்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடிய காவியத்திற்குச் சாற்றுக்கவி வழங்கிய தஞ்சை அஞ்சனாட்சியின் மரபில் வந்தவளல்லவா நீ! அதனால்தான் இவ்வளவு அருமையாகப் பாடியிருக்கிறாய்! இந்தா இந்த முத்து மாலையைப் பரிசாகப் பெற்றுக்கொள்!" என்று கூறித் தன் கழுத்திலிருந்த முத்துமாலையை அவளிடம் கொடுத்தாள். தாசி தங்கம், அந்த முத்துமாலையைப் பெற்றுக் கொண்டு, இதென்னடி! இந்த முத்துமாலை பச்சை நிறமாக இருக்கிறது!" என்று கேட்டாள்.

"இது, நெல்லிலிருந்து பிறக்கும் முத்துக்களால் ஆனமாலை, இதன் நிறம் பச்சையாகத்தான் இருக்கும் என்றாள்.

"சிப்பியில் தான் முத்துப் பிறக்கும் என்பார்கள்; நெல்லிலும் முத்துப் பிறக்குமா?" என்றாள்.

நெல்லில் மட்டுமல்ல, சங்கு, மேகம், மூங்கில், இப்பி, கரும்பு, கொக்கின் தலை, பாம்பின் தலை, மீன் தலை, யானைக் கொம்பு, பன்றிக் கொம்பு ஆகிய பத்தி டங்களிலும் முத்துக்கள் பிறக்கும். யானைக் கொம்பின் முத்து மாடப்புறாவின் முட்டையைப் போல் திரண்டு வெண்மையகா இருக்கும். மேகத்தின் முத்து இளஞ் சூரியன் நிறமாயிருக்கும். மூங்கிலின் முத்து மழைத் துளி நிறமாயிருக்கும். மீன் முத்து பாதிரிப் பூ நிறமா யிருக்கும். கரும்பின் முத்து பொன்னிறமாயிருக்கும். மூங்கிலின் முத்தும் அப்படி இருப்பதுண்டு. ஜூலியஸ் சீசர், புருட்டசின் தாயாகிய செவிலியா என்பவ ளுக்குத் தமிழ் நாட்டு முத்தாகத் தேடிப் பார்த்து ஒரு முறை பரிசளித்தானும். அந்த ஒரு முத்தின் மதிப்பு மட்டும் 47457 தங்க நாணயங்களாம். ஒரு முறை வள்ளல் சீதக்காதியை நாடி ஒரு புலவர் வந்தாராம். பரிசில் கேட்ட புலவரைக் கண்ட சீதக்காதி "இப்போது உமக்குக் கொடுக்க என்னிடம் எதுவுமில்லை. அதோ என் மனைவி இருக்கிறாள். அவளிடம்கேளுங்கள்" என்று சொல்லவே, அந்தப்புலவர் உடனே வள்ளலின் மனைவி யருகில் சென்றார். அப்போது முறத்தில் முத்துக்களைக் கொட்டிப் புடைத்துக் கொண்டிருந்த அந்த அம்மையார். புலவரைக் கண்டதும், முறத்தில் இருந்த முத்துக்களை அவரது மடியிலே கொட்டினாராம். ஏண்டி தங்கம் அப்படி நமக்குப் பரிசு தருபவர்கள் யாரிருக் கிறார்கள்? நம் வீடு தேடி வருபவர்கள், நமக்கு முத்துக் களையா தருகிறார்கள்? எச்சில் முத்தங்களைத்தானே தருகிறார்கள்" என்றாள்.

"நம் வீட்டுக்கு வரும் வண்டு வெறியர்கள் என்ன வள்ளல்களா? தர வேண்டியதைத் தந்து நம்மிடம்

பெறவேண்டியதைப் பெற்றுச் செல்லும் தந்திரக் காரர்கள் தானே அவர்கள்!" என்றாள் தங்கம்.

"நாம்தான், பிறருக்குப் படுக்கைப் படகுகளாக இருக்கிறோம். நம் குலத்தில் பிறந்த பெண்கள் எல்லோருமே அப்படியா இருக்கிறார்கள் என்றாள் ஊசி.

"ஒழுக்கத்தோடு வாழும் பெண்கள் பலர், நம்மினத்தில் இன்றும் இருக்கிறார்கள். அன்றும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இல்லறத்திற்குரியவர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அச்சுதமங்கலத்துக் கோயிலுக்குரிய தேவரடியாள் ஒருத்தியை மேற்குலத்தான் ஒருவன் திருமணம் செய்துகொண்டதாகக் குலோத்துங்கனது 11—ஆம் ஆண்டுச் சாசனம் கூறுகிறது. மற்றும், இரண்டாம் இராசராசன் ஆட்சியில் திருவொற்றியூர்த் தேவரடியாளான சதுரன் சதுரி என்பவளை, நாகன்காடன் என்பவன் மணந்து கொண்டதாகவும் மற்றோர் கல்வெட்டு கூறுகிறது" என்றாள் தங்கம்.

"அப்படியா! அந்தக் கல்வெட்டுகள் எங்கிருக்கின்றன? அவற்றை நான் படித்துப் பார்க்கவேண்டும்" என்றாள் ஊசி.

"அவற்றை நீ பிறகு படித்துப் பார்க்கலாம். முதலில் வீடு தேடி வந்திருக்கும் பார்வையாளர்களைப் பார்க்கலாம் வா" என்று அவளை அழைத்துக் கொண்டு, வீட்டிலுள்ள கூடத்துக்கு வந்தாள்.

கூடத்தில், ஒரு குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. விலையுயர்ந்த கட்டிலின்மீது, வீணை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளிற் சிறந்த புலமை உடையவனும், ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனுமாகிய மகேந்திரவர்மன்

என்பவன் 'பரிவாதிநீ' என்னும் பெயர் கொண்ட வீணையை மீட்டுவதுபோல் தீட்டப்பெற்ற வண்ண ஓவியம் ஒன்று சுவரில் மாட்டப் பெற்றிருந்தது. கூடத்துக்கு வந்த இருவரும் வீணை இருந்த கட்டிலின்மீது உட்கார்ந்தனர்.

ஊசி என்பவள் தங்கத்தைப் பார்த்து, "ஏண்டி தங்கம், இதோ எரியும் இந்த விளக்கு, குத்துவிளக்கா அல்லது குத்தும் விளக்கா?" என்று கேட்டாள்.

"இது குத்தும் விளக்கல்ல, குத்தும் விளக்காக இருந்தால் நான் இதை விலை கொடுத்து வாங்கியிருப்பேனா?" என்றாள் தங்கம்.

"குத்துவிளக்குகளை நாம் விலை கொடுத்து வாங்குகிறோம். நம்மைக் குத்தும் விளக்குகளோ நம்மை விலை கொடுத்து வாங்குகின்றன" என்றாள் ஊசி.

அப்போது, எலி ஒன்று குத்துவிளக்கிலுள்ள எண்ணெயில் தன் வாலைத் தோய்த்துத் தன் வாலிலுள்ள எண்ணெயை நக்கிக் கொண்டிருந்தது. அதனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஊசி என்பவள் தங்கத்தைப் பார்த்து, "தங்கம் அந்த எலியைப் பாரடி! அது, அந்தக் குத்துவிளக்கிலுள்ள எண்ணெயை நக்காமல், தனது நீண்ட வாலை எண்ணெயில் தோய்த்து, அந்த எண்ணெயை நக்குகிறதே அது ஏன்?" என்று கேட்டாள்.

"ஏனெனில் அந்த எண்ணெய்தான் எலியின் உடம்பில் காமரசத்தை வளர்க்கிறது. இவ்வாறு எண்ணெயில் தோய்ப்பதற்கு எளிதாக இருக்கும் பொருட்டே எலியின் வால் மிகவும் நீளமாகப் படைக்கப்பட்டிருக்கிறது" என்றாள் தங்கம்.

"கொக்கோக நுட்பங்களை உன்னிடம் இளைஞர் களும் கற்றுக் கொள்கிருர்கள். இங்கு வரும் எலிகளும் கற்றுக் கொள்கின்றன" என்ருள் ஊசி.

"பார்த்தாயா! பார்த்தாயா! உண்மையைச் சொன் ஞல் நீ என்னை ஊசிபோல் குத்துகிருயே! இதஞல்தான் உனக்கு ஊசி என்று பெயரிட்டார்களா?" என்று கேட்டாள் தங்கம்.

"அடி போடி பைத்தியக்காரி! ஊசி என்று எனக்கு ஏன் பெயர் வைத்தார்கள் தெரியுமா? புதுவைக்கு அருகி லுள்ள கதிர்காமம் என்னும் ஊரில் ஆய் என்னும் தாசி ஒருத்தி இருந்தாளாம். அவளுடைய தங்கை ஊசி என்பவள் மிகப் பெரிய ஏரி ஒன்றை வெட்டிஞளாம். ஊசி என்பவள் வெட்டிய ஏரி ஆதலின் அதற்கு ஊசி இட்ட ஏரி என்று பெயரிடப்பட்டது. ஊசி இட்ட ஏரியைத்தான் இப்போது நாமெல்லோரும் ஊஷ்ட்டேரி, ஊஷ்ட்டேரி என்று அழைத்து வருகிரேம். எக்காலத் திலும் பயன்படும் ஏரியொன்றை வெட்டியவளாகிய ஊசி என்பவளின் நினைவாகத்தான் எனக்கு ஊசி என்று பெயரிடப்பட்டதாம்" என்ருள் ஊசி.

அப்போது தங்கம் அவளைப் பார்த்து, "அன்ருெரு நாள் நாமிருவரும் ஏழூர் நாட்டுத் தலைநகரிலுள்ள ஏரியில் குளித்தோமே, அந்த ஏரியைக் கற்பகவல்லி— சண்பகவல்லி என்னும் பெயருடைய இரண்டு தாசிகள் தாம் வெட்டிஞர்களாம். 14-ஆம் நூற்ருண்டில் வெட்டப்பட்ட அந்த ஏரியைப் பார்க்கும்போது, அதை வெட்டியவர்களின் வரலாறு என் நினைவுக்கு வருகிறது. அதே நேரத்தில், அவர்களின் முடிவை நினைக்கும் போது என் உள்ளம் வேதனைப்படுகிறது" என்ருள் தங்கம்.

"ஏன்" என்று கேட்டாள் ஊசி.

"அவர்கள் இருவரும் எக்காரணத்தாலோ வாழ்வில் வெறுப்புற்றுத் தங்கள் பட்டுச் சேலைகளின் முன்தானையைக் கட்டிக்கொண்டு, மற்றப் பகுதியை பிறரிடம் கிழித்துக் கொடுத்துவிட்டு, அந்த ஏரியிலேயே வீழ்ந்து இறந்து போனார்களாம். அவர்கள் வளர்த்த நாயும் அவர்களோடு ஏரியில் வீழ்ந்து இறந்துவிட்டதாம்" என்றாள் தங்கம்.

அவள் கூறியதைக் கேட்டதும், ஐயோ பாவம் என்று வருந்தினாள் ஊசி.

அப்போது அவள் வீட்டுக்குக் கவிஞன் ஒருவன் வந்தான். அவனைக் கண்டவுடன், தளர்ந்துபோன தாய்க்கிழவி ஓடிவந்து வரவேற்றாள்.

தைப்பதற்கும், மொய்ப்பதற்கும் உரிய இந்த வேளையில் நாம் இங்கே இருப்பது தடங்கலாக இருக்குமெனக் கருதி, தங்கத்திடம் விடை பெற்றுக் கொண்டு ஊசி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றாள். காம வெறியோடு வந்த கவிஞன் தாய்க்கிழவியைப் பார்த்து,

"தங்கம் எங்கே?" என்று கேட்டான்.

"தட்டான் தட்டுகின்ற தங்கம் இந்தத் தரையில் இருக்கிறது. நீங்கள் தேடுகின்ற தங்கம் அந்த அறையில் இருக்கிறது" என்றாள் தாய்க்கிழவி.

"நீர் பாய்ச்சுதற்குரிய நிலம். நலமாக இருக்கிறதா?" என்றான் அவன்.

"நலமாகவும் இருக்கிறது. அடிக்கடி அது நனைந்து கொண்டுமிருக்கிறது" என்றாள் தாய்க்கிழவி.

"உங்கள் மகள் தங்கம் உங்களுக்குத் தங்கமாக இருக்கலாம். ஆனால் இங்கு வரும் வாலிபர்களுக்கெல்லாம் அவள் ஒரு வண்ணத் தாமரை. அன்றாடம் விரிந்து குவியும் வெள்ளைத் தாமரைப்பூவில் சரஸ்வதி இருப்பாளாம்!" என்றான் கவிஞன்.

"என் மகள் சரஸ்வதி அல்ல; அவள் ஒரு சரசவதி அவள் வெள்ளைத் தாமரைப்பூவில் இருக்கமாட்டாள். வெண்பட்டு மெத்தையில்தான் இருப்பாள்" என்றாள் தாய்க்கிழவி.

"அவள் ஒரு பேரழகி! அது மட்டுமல்ல, ஆடல் பாடல் ஆகிய கலைகளிலும் அவள் சிறந்து விளங்கும் சிங்காரி" என்றான் கவிஞன்.

"இத்தகைய சிறப்புகள் அவளிடத்தில் இருப்பதால் தான் இருபதாம் நூற்றாண்டு மாதவி என்று எல்லோருமே அவளைப் பாராட்டுகிறார்கள். அதிருக்கட்டும், தாங்கள் யார்? தங்களுக்கு எந்த ஊர்?" என்று கேட்டாள் தாய்க்கிழவி.

"நான் ஒரு கவிஞன். தேரழுந்தூரில் பிறந்தவன்" என்றான் அவன்.

"தாங்கள் தேரழுந்தூரில் பிறந்தவரா? கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊரல்லவா அவ்வூர்?" என்றாள் அந்தக் கிழவி.

"ஆமாம்,
மன்னவனும் நீயோ?
வளநாடும் உன்னதோ?
உன்னை அறிந்தோ
தமிழை ஓதினேன்.

என்று, மன்னனையே எதிர்த்துக் கேள்வி கேட்டவன் அந்த மகாகவி'' என்றான் அவன்.

''கம்பன் ஒரு மகாகவி என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவன், ஒழுக்கத்தைப் பற்றி ஊருக்கெல்லாம் உபதேசம் செய்தானே, அவன் ஒழுக்கத்தோடு வாழ்ந்தானா? ஆஸ்தான கவிஞனுக்குரிய அந்தஸ்தை அவன் காப்பாற்றினானா? இல்லையே! அவனை ஆதரித்து வந்த சடையப்ப வள்ளலோ அடிக்கடி கரும்புகளைத் தொட்டு வந்தவன். செம்புகோல் கம்பனோ, பெண்களின் குரும்பைகளைத் தொட்டு வந்தவன். அன்றாடம் அவன் குத்தகை முத்தம் கொடுத்து வந்தவன். மயிலாப்பூரில் வாழ்ந்த திருவாலி என்னும் வள்ளலைப் புகழ்ந்து பாடி, அவன் வழங்கிய பரிசில் பணத்தைக் கொண்டு, தாசி வல்லியின் அங்கத்தில் தங்க நகைகளை அணிவித்து, அன்றாடம் அவள் மடியில் அடைகாத்துக் கிடந்தவன் அல்லவா அவன். அவன் ஒருநாள் தாசிப்பெண் ஒருத்தியை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டானாம். ஒரு குளத்திலுள்ள நீரை ஒரு குடத்தில் எடுத்துக்கொண்டு போகமுடியுமேயன்றி அந்தக் குளத்தையே யாரும் எடுத்துக்கொண்டு போக முடியாது. அதுபோல், இங்கு வரும் இளைஞர்கள் என் மகளைப் பஞ்சணையில் அழுத்திக் கொண்டிருக்க முடியுமேயன்றி, அந்தக் கம்பனைப்போல் யாரும் அவளை இழுத்துக்கொண்டு போய்விட முடியாது. வேண்டுமானால், அவளுடைய செவ்விதழ்களில் இருக்கும் செந்தேனை எடுத்துக் கொண்டு போகலாம்'' என்றாள் தாய்க்கிழவி.

''நான் இங்கு அதற்காகத்தான் வந்திருக்கிறேன்'' என்றான் கவிஞன்.

"ஐந்து பொன் கொடுத்தால் நீங்கள் அங்கேபோய்த் தேனெடுக்கலாம்" என்றாள் கிழவி.

"நான் ஒரு கால்நடைக் கவிஞன். என் கையில் காசில்லை. என்னிடம் அற்புதமான கற்பனைதான் இருக்கிறது" என்றான் கவிஞன்.

"பொய் விரிக்கும் இவ்விடத்தில் வெறும் கைவிரிக்கும் கவிஞரே! தங்களிடம் கற்பனைதான் இருக்கிறதா? கற்பனை என்பது என்ன தெரியுமா? அது, உருப்படாத கவிஞர்கள் செய்யும் ஓயாத முயற்சி. கலவி என்பது, பணம் கொடுப்பவர்களுக்கு தாசிகள் தரும் பயிற்சி. நீங்கள் முன்பணம் கொடுத்தால் அந்த முன் படத்தைப் பார்க்கலாம். இல்லையென்றால் இப்போதே இவ்விடத்தை விட்டு நீங்கள் எழுந்து போகலாம்" என்றாள் தாய்க்கிழவி.

எதிர்பார்த்து வந்த கவிஞன், ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றான். அவன் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு, ஓர் இளைஞன் அங்கே வந்து, தாய்க் கிழவியை முதலில் சந்தித்தான். தங்கத்தைப் பிறகு சந்தித்தான்.

தாய்க்கிழவி, விளக்கை எடுத்துக்கொண்டு ஓரிடத்திற்குச் சென்றாள். தங்கமும் அவனும் வேறிடத்திற்குச் சென்றனர்.

ஆலிங்கனத்திற்கு உரிய இடம் அந்த இடம்.

அணைப்பதற்கும் இணைப்பதற்கும் உரிய அறை அந்த அறை.

அந்த அறையின் சுவரொன்றில், வசி+சிவ என்றும்; வ+சி+வ என்றும் எழுதப் பெற்றிருந்தது.

அவற்றை அவன் படித்துப் பார்த்துவிட்டு "ஏன், இங்கு இவ்வாறு எழுதி வைத்திருக்கிறீர்கள்? இதற்குப் பொருளென்ன?" என்று அவன் அவளைக் கேட்டான்.

வசி என்றால் தங்கு என்பது பொருள். சிவ என்றால் ஆனந்தம் என்பது பொருள். வ+சி+வ என்றால், வா+தங்கு+ஆனந்தம் பெறு என்பதைக் குறிக்கும்.

இங்கே வா
என்னிடத்தில் தங்கு
ஆனந்தம் இதோ அனுபவி

என்பதே இதற்குப் பொருள். 'சிவ சிவ' என்பது சைவ மந்திரம். 'வசிவ' என்பது சரச மந்திரம். ஏழைகள் உணவைத் தேடுகிறார்கள். பணக்காரர்கள் பசியைத் தேடுகிறார்கள். நாங்களோ உங்களைப் போன்ற இளைஞர்களைத் தேடுகிறோம்" என்றாள் தங்கம்.

"நீங்கள் தேடுகிறீர்கள்.
நான் தேடியும் அலையமாட்டேன்.
வந்தாலும் விடமாட்டேன்."

என்றான் அவன்.

"நான் பகலாகவும்,
பகலில் தாமரையாகவும்,
இரவாகவும்,
இரவில் அல்லிப்பூவாகவும் இருப்பவள்.
நான் ஒரு பானுமதி"

என்றாள் அவள்.

"நீ படிதாண்டாப் பத்தினியுமல்ல,
நான் முற்றும் துறந்த முனிவனுமல்ல." என்றான் அவன்.

காய்ந்த இறைச்சியையும், புதுத்தயிரையும் உண்ணக் கூடாது. உண்டால் ஆயுள் குறைந்துவிடும் என்பார்கள்" என்றாள் அவள்.

"பச்சை இறைச்சியும், பழைய தயிரும் இருக்கு மிடம் தெரிந்துதானே நான் இங்கு வந்திருக்கிறேன்" என்றான் அவன்.

மேட்டுக்கும் இரண்டு தொடைகளின் கூட்டுக்கும் தொகை தந்த இளைஞன் தங்கத்தைத் தழுவினான். அவள் தன் உதடுகளால் அவன் உதடுகளைக் கழுவி னாள்.

"ஆற்றைக் கண்டவிடத்து அவிழ்த்து உண்ணும் உணவை, 'ஆற்றுணா' என்பார்கள். அந்தச் சோற்று மூட்டையைத் தோளில் கோத்துக் கொண்டு செல்வ தனால் அதனைத் 'தோட்கோப்பு' என்றும் சொல்லுவார் கள்" என்றான் அவன்.

"உங்கள் ஆசைப்பசிக்கு நான் ஆற்றுணாவாகப் பயன் படவும், தோளில் கோப்பதற்குரிய தோட்கோப் பாக இருக்கவும் தானே உங்களை இங்கழைத்து வந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

"கையினால் இதமாக, அதாவது பக்குவமாக எடுப் பதனால் 'கையிதம்' என்று பெயர் வந்தது. கையிதம் என்னும் சொல்லைத்தான் இன்று நாமெல்லோரும் 'காயிதம்' என்று சொல்லுகிறோம்" என்றான் அவன்.

"பயன் படும் காகிதத்தையும் பக்குவமாக எடுக்க வேண்டும்.

பருவக் குமரிகளையும் பக்குவமாகக் கையாள வேண்டும்" என்றாள் அவள்.

அவன் அப்போது சிரித்தான்.
அவள் அப்போது விரித்தாள்.
"பேரியாழுக்கு இருபத்தொன்று நரம்புகள்
மகரயாழுக்கு பத்தொன்பது நரம்புகள்
சகோடயாழுக்குப் பதினான்கு நரம்புகள்
செங்கோட்டியாழுக்கு ஏழு நரம்புகள்"
என்று சொன்னாள் அவள்.

"ஆதி யாழுக்கோ ஆயிரம் நரம்புகள்" என்றான் அவன்.

"ஆதி யாழ் இப்போது நம்நாட்டில் இல்லையே" என்றாள் அவள்.

"ஆதி யாழ் இல்லாவிட்டால் என்ன, அருகில்தான் நீ இருக்கிறாயே!"

என்று சொல்லிக் கொண்டே அவள் உடம்பிலுள்ள பச்சை நரம்புகளையும், பருவக் குரும்பைகளையும் அவன் தடவினான்.

அவன் அங்கே
நின்றான்—இருந்தான்.
அவள் அங்கே
இருந்தாள்—கிடந்தாள்.
அந்த வாடகை வாலிபன்
அவள் மீது படிந்தான்.
அப்போது,

அங்கிருந்த வெளிச்சம் விலகிக் கொண்டது.
அந்த அறைக்குள் முன்பே நுழைந்த
நீண்ட சதுரமான இருட்டில்,
நான்கு கால் நாடகம் நடைபெற்றது.

அவளுக்கு அது—பழைய நாடகம், புதிய ஒத்திகை.

அவனுக்கு அது—நீண்டநாள் ஆசை, நேர்முகத் தேர்வு.

உரையாடலும், பாடல்களும் இல்லாமல் அந்த ஊமை நாடகம் நன்கு நடைபெற்று முடிந்தது.

அவள் அவனைப் பார்த்து "உங்கள் புதிய நாடகத்திற்குப் பெயர் வைக்க மறந்துவிட்டீர்களோ?" என்று கேட்டாள்.

"நான் இதை மறந்து விடவில்லை. பிள்ளை பிறந்த பிறகுதானே அதற்கு நாம் பெயரிடுகிறோம். இங்கு நடைபெற்ற நாடகத்திற்கு இனிமேல்தான் ஒரு நல்ல பெயர் வைக்க வேண்டும்" என்றான் அவன்.

"இரண்டு பேர் மட்டுமே பார்க்கக் கூடிய இந்த நாடகத்திற்கு என்ன பெயர் வைத்தால் பொருத்தமாக இருக்கும்" என்று அவள் கேட்டாள்.

"இந்த நாடகத்திற்குப்' 'பிரபுலிங்கலீலை' என்று பெயரிடுவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றான் அவன்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், தாம் இயற்றிய நூலொன்றுக்குப் பிரபுலிங்கலீலை என்று பெயரிட்டிருக்கிறார். நீங்களோ, பிறரறியாமல் நடத்தும் இந்த நாடகத்திற்குப் பிரபுலிங்கலீலை என்று பெயர் வைக்க விரும்புகிறீர்கள். சிற்றின்பச் சிவப்பிரகாச சுவாமிகளே! இந்த நாடகம் இங்கு நாள் தோறும் நடைபெற உங்களைப் போன்றவர்களின் உதவி எங்களுக்கு எப்போதும் தேவை என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

அவன் சிரித்தான்.

அவன் சிரிக்கின்றானே என்பதற்காக

அவளும் சிரித்தாள்.

---

# அவனுக்கு மன்மத மயக்கம் அவளுக்குக் கண்மத மயக்கம்

ஜான்சிராணி லட்சுமிபாய் மிகவும் அழகாக இருப்பாளாம். அவள் முகம் உருண்டையாகவும், கண்கள் பெரிதாகவும், பேரொளி மிக்கதாகவும் இருக்குமாம்.

ஜான்சிராணியைப் போலவே, பூங்கோதை என்பவளும் அழகாகத்தான் இருந்தாள். அவளது முகமும் அம்பு விழிகளும் அப்படித்தான் இருந்தன.

அந்த ஜான்சிராணி, நடுத்தர உயரமுடையவளாம். பூங்கோதையும் அப்படித்தான் இருந்தாள்.

இந்தியப் பெண்கள் கல்வி கற்று முன்னேறவும், பூவும் பொட்டுமிழந்து வேதனைப்படும் விதவைகளின் துயர் தீரவும், தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு வந்த பண்டிதை ராமாபாய் அம்மையார் மிகவும் வியக்கத் தக்க நினைவாற்றல் உடையவராம். அவ்வம்மையார் தம்முடைய பன்னிரண்டாம் வயது முடிவதற்குள்ளாகவே பதினெட்டாயிரம் பாடல்களை மனப்பாடமாக ஒப்புவித்து வந்தாராம். அவ்வம்மையாரைப் போலவே பூங்கோதையும் பல்லாயிரக்கணக்கான செந்

தமிழ்ப் பாடல்களைச் சின்னஞ்சிறு வயதிலேயே மனப் பாடமாக ஒப்புவித்து வந்தவள்.

ஆட்டனத்தி என்பவன், மன்னன் கரிகாற் சோழனின் மருமகன். ஆதிமந்தி என்பவளின் கணவன். அவன், பரந்த மார்பும், உயர்ந்த தோளும், சுருண்ட குழலும், இருண்ட விழிகளும் உடையவனும். பூங்கோதையின் காதலனாகிய பொய்யா மொழி என்ப வனும் அப்படித்தான் இருந்தான்.

அவனுக்கு அவள்தான் ஆதிமந்தி

அவளுக்கு அவன்தான் ஆட்டனத்தி

ஆட்டனத்தியோ ஆடற்கலையில் வல்லவன். பொய்யா மொழியோ அடுக்களைக்கலையில் வல்லவன். அதாவது, ஆசுகவி காளமேகத்தைப் போலவும், பழங் காலப் புலவராம் பகழிக் கூத்தரைப் போலவும் சமைப் பதில் வல்லவன்.

ஆதிமந்தியோ, ஊடத் தெரிந்தவள். கவிதை பாடத் தெரிந்தவள்.

பூங்கோதையோ, உடுக்கத் தெரிந்தவள், மாலை தொடுக்கத் தெரிந்தவள்.

தமிழ்நாட்டின் பெருமைக்கும், தமிழ்கலைக் வளர்ச் சிக்கும், மறுமலர்ச்சி ஊட்டி மாண்புறச் செய்தவரும்; இசைக் கலைக்கும், மருத்துவக் கலைக்கும், விவசாய வளர்ச்சிக்கும் அரும்பெருந் தொண்டாற்றி வந்தவரும், 'கருணாமிர்த சாகரம்' என்னும் அரியதோர் நூலைத் தமிழிசை உலகுக்கு வழங்கியவருமாகிய தஞ்சை ராவ் சாகிப் ஆபிரகாம் பண்டிதரின் மூத்த மகளாகிய திருமதி அன்ன பூரண வல்லி என்பாரைப் போன்று பூங்கோதையும் வீணை வாசிப்பதில் வல்லவள்.

ஆடவரைச் சேர்வதில்லை என்று விரதம் பூண்டிருந்தவளாகிய சுரமஞ்சரி என்பவள், சீவகனின் இசையைக் கேட்டு மயங்கி, அவனுக்கு மாலையிட்டது போல், பூங்கோதை என்பவளும், பொய்யா மொழியின் இன்னிசையைக் கேட்டு மயங்கி, அவனைக் காதலித்து, அவனது பருவசுகத்திற்குப் பாத்திரமானவள்.

அன்று சனிக்கிழமைக்கு அடுத்த நாள். அதாவது கீழே இற்று விழாமல், மேலே நாள் தோறும் இயங்கிக் கொண்டிருக்கும் ஞாயிறென்னும் சூரியனுக்குரிய ஞாயிற்றுக் கிழமை.

மலராய்ந்து பூத்தொடுக்கும் மாலை நேரம்

ஒரு பக்கமாகச் சாய்ந்தபடி நடந்து செல்லும் நண்டைப் போல, மகர மாதத்துச் சூரியன் சிறிது சாய்ந்தபடி வானத்தில் சென்று கொண்டிருந்தது.

அப்போது, பொய்யாமொழி பூங்கோதையைப் பார்த்து "இந்தச் சூரியன் மேற்கே போகும் வெயில்! நாம் கிழக்கே போகும் ரயில்!" என்று சொன்னான்.

"இந்த ரயிலுக்கு நம் பருவக் காதல்தான் அன்று டம் பச்சைக் கொடி காட்டி வருகிறது" என்றாள் பூங்கோதை.

"வெளிநாட்டிலிருந்து நம்நாட்டு மயில் வரவில்லை. ஓடும் ரயில்தான் வந்தது. புதிதாக நம்நாட்டுக்கு வந்த புகைவண்டி என்னும் ரயிலைப் பற்றிப் பூவை கலியாண சுந்தர முதலியாரும், அவருடைய மாணவராகிய பேறை சகந்நாதபிள்ளை என்பவரும்தான் முதன் முதலாகப் பாடல் பாடினர்" என்று கூறினான் பொய்யாமொழி.

"அப்படி என்றால், அவர்களது காலத்தில் வாழ்ந்த மகாவித்துவான்களும் மற்றவர்களும்"...என்றாள் பூங்கோதை.

"வழக்கம் போலவே மயிலைப் பற்றியும், குயிலைப் பற்றியும், ஆண்டவனைப் பற்றியும், தில்லைத் தாண்டவனைப் பற்றியுமே பாடல்கள் எழுதிக் கொண்டிருந்தனர்" என்றான் பொய்யாமொழி.

"அப்படியா! அப்படியென்றால் அவர்களெல்லாம் கண்ணிருந்தும் குருடர்கள்! காலிருந்தும் முடவர்கள்." என்றாள் பூங்கோதை.

"அவர்களைப் போலவே இக்காலத்திலும் பலர் இருக்கின்றனர்" என்றான் அவன்.

"அதிருக்கட்டும், புகை வண்டியைப் பற்றி அப்புலவர்களிருவரும் பாடிய அந்தப் புதிய பாடலை எனக்குச் சொல்லுங்களேன்" என்று அவள் அவனைக் கேட்க, உடனே அவன்

பாருங்கள் ஓர்நொடியில் பன்னுமிடம் போய்வரலாம்
வாருங்கள் என்னதடை மாநிலத்தீர்—நீருங்கள்
காலால் நடவாமல் காசுமிக நல்காமல்
மேலாக வாழவினி மேல்.

என்னும் பாடலை அவளிடத்தில் கூறினான். அவ்வெண்பாவைக் கேட்ட அப்பெண்பாவை அப்புதிய பாடலையும், அப்பழைய புலவர்களையும் பாராட்டினாள்.

அந்திவானம், அப்போது சேரன் செங்குட்டுவனின் முன் கோபத்தைப் போல் சிவந்து கொண்டிருந்தது

மதுவிலக்கை விரும்பாத வண்டுகள் மலர்களைச் சந்திப்பதற்குச் சென்று கொண்டிருந்தன.

"போவோம் புறப்படுங்கள்" என்றாள் பூங்கோதை.

"எங்கே? குளிர் தூங்கும் குற்றாலத்திற்கா?" என்று கேட்டான் பொய்யா மொழி.

"கோடை வரட்டும், குற்றாலத்திற்குப் போகலாம். நாமிருவரும் இப்போது காற்று வாங்க கடற்கரைக்குப் போகலாம்" என்றாள் பூங்கோதை.

காதலி அழைத்தாள்.

அவள் கண்களும் அழைத்தன.

அதனால், பொய்யா மொழி உடனே கடற்கரைக்குப் புறப்பட்டான். பூங்கோதையும் அவனோடு புறப்பட்டாள்.

ஒற்றையடிப் பாதை வழியாக இருவரும் நடந்து சென்றனர். செல்லும் வழியில், அவன் அவளைப் பார்த்து—

"நீ இட்ட அடி நோகிறதா?

எடுத்த அடி கொப்பளிக்கிறதா?" என்று கேட்டான்.

"நான் இட்ட அடியும் நோகவில்லை; எடுத்த அடியும் கொப்பளிக்கவில்லை!"
என்றாள் பூங்கோதை.

"அம்பிகாபதியின் காதலியாகிய அமராவதி என்பவள், இட்ட அடி நொந்ததாமே! எடுத்த அடி கொப்பளித்ததாமே!" என்றான் அவன்.

"அமராவதி என்பவளோ ஒரு மன்னன் மகள். நானோ, மண்குடிசையில் வாழ்பவனின் மகள். அவளெங்கே? நானெங்கே? அவளோ மெத்தையில் படுத்திருந்தவள், நானோ, அன்றாடம் செத்தையில் படுத்திருப்பவள் தானே! என் போன்ற ஏழைப் பெண் களுக்கு இட்ட அடிதான் நோகுமா? எடுத்த அடிதான் கொப்பளிக்குமா?" என்றாள் பூங்கோதை.

அவன் சிரித்துக் கொண்டே நடந்தான்.

அவள் அவனைத் தொடர்ந்தாள்.

நீங்காத நீரும்—

தூங்காத அலைகளும் உடைய கடற்கரைக்கு இருவரும் வந்து சேர்ந்தனர்.

ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த மத வாதிகளைப்போலவும்; இன்றைய இருபதாம் நூற்றாண் டில் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் அரசியல் வாதிகளைப் போலவும் அந்தக் கருங்கடல் ஓயாமல் கத்திக் கொண்டே இருந்தது.

அவள்—அக்கடலின் அலைகளைப் பார்த்தாள்.

அவன் — அக்கடலில் செல்லும் கப்பலைப் பார்த்தான்.

அவள்—மீன்களைப் பார்த்தாள்.

அவன்—மீனவர்களைப் பார்த்தான்.

அவள்—அங்கிருந்த மணல்மேடுகளைப் பார்த்தாள்.

அவன்—மணல்மேடுகளைப் பார்க்காமல்—அந்த மங்கையின் மேடுகளைப் பார்த்தான்!

அவ்வாறு பார்த்தவனை அவள் பார்த்தாள்.

அதற்குப்பிறகு, இருவரும் அந்தக் கடலைப் பார்த்தனர்.

"கடல் மிகவும் ஆழமுடையது" என்றாள்.

"ஆழமுடையதாக இருப்பதால்தான், கடலுக்கு 'ஆழி' என்னும் பெயர் வந்தது." என்றான்.

"கடலில் ஆயிரம் சிப்பிகள் சேர்ந்த இடத்தில் ஓர் இடம்புரிச் சங்கும்; ஆயிரம் இடம்புரிச் சங்குகள் கூடிய ஓரிடத்தில் வலம்புரிச் சங்கும்; ஆயிரம் வலம் புரிச் சங்குகள் கூடிய இடத்தில் ஒரு பாஞ்ச சன்யமும் இருக்கு மென்று சொல்லுகிறார்கள். கிடைத்தற்கரிய பாஞ்சசன்யம் என்னும் சங்கைத்தான் கிருஷ்ணபக வான் தன் கையில் வைத்திருந்தாராம்" என்றாள் அவள்.

"அப்படியா! அப்படியென்றால் அந்த மகாவிஷ்ணு கடத்தல் மன்னனாகிய மஸ்தானைக் காட்டிலும் மிகப் பெரிய கடத்தல் மன்னனாக இருக்கவேண்டும்" என்றான் அவன்.

"பாற் கடலில் மகாவிஷ்ணு பள்ளிகொண்டிருந் தாராமே! உண்மையில் பாற்கடல் என்பதாக ஒன்று இருந்திருக்குமா? என்று கேட்டாள் அவள்.

"பாற்கடல், தயிர்க்கடல் முதலிய ஏழுவகைக் கடல்கள் இருந்ததாக எழுதி வைத்திருப்பதெல்லாம் புராணிகரின் புரட்டாகும். எழுகின்ற கடலைத்தான் இவர்கள் எழுகடல் என்றும்; ஏழுகடல் என்றும் சொல்லி ஏமாற்றி வருகின்றனர் எழுகடல் உண்டேயன்றி உலகில் ஏழுவகைக் கடல்கள் இருந்ததில்லை." என்றான் அவன்.

கடல்,
இந்த உலக உருண்டையின்
முகத்தில் தோன்றிய
முதற் பள்ளத்தில் தவறிவிழுந்து—
விழுந்த நாளன்று முதல்
இன்று வரை
ஓயாமல் அழுதுகொண்டே இருக்கும்
ஓர் ஆதிவாசி.
மரியாதைக்குரிய மகரமீன்களும்,
திமிர் பிடித்த திமிங்கிலங்களும்,
வாடகை கொடுக்காமலே
வாழ்ந்து வரும் ஒரு வீடு!
கன்னியின் அழுகை இருக்கிறதே
அது,
ஒரு கண்ணீர் விளம்பரம்.
இந்தக் கடல் இருக்கிறதே
இது,
மிகப் பெரிய தண்ணீர் விளம்பரம்.
மண்ணால் அமைந்த தீவுகளே
இதன் மீதுள்ள மச்சங்கள்.
உப்பும் பவளமும்,
முத்தும் சங்கும்.
ஈரக்கடலின் எச்சங்கள்.
சிந்தாமணி, சிலப்பதிகாரம், பெரியபுராணம்
ஆகிய மூன்று காவியங்களின் சரக்கும்
கம்பராமாயணத்தில் கலந்திருக்கிறது.
ஆகவே,
கம்பராமாயணம் ஒரு கலப்படம்.
ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர்
ஆகிய மூவகை நீரும் கடலில் கலந்திருக்கிறது.

ஆகவே,

கடல் தண்ணீரும் ஒரு கலப்படம்'' என்ருள் அவள்.

இது, பாடும் பாட்டு
பத்துப் பாட்டல்ல,
இது, சேர்க்கும் தொகை
எட்டுத் தொகையல்ல,
இது, பார்க்கும் கணக்கு
பதினெண்கீழ்க் கணக்கல்ல.
கண்வழியாகத்தான் காதல் பிறக்கிறது,
மடல் வழியாகத்தான் வண்டு நடக்கிறது,
கடல் வழியாகத்தான் கப்பல் செல்கிறது.
இந்தக் கடல்,
கப்பல்களையும் தடுப்பதில்லை,
கயவர்களையும் தடுப்பதில்லை,
ஆரவாரம் செய்யும் கடல்
அன்றே அன்னியரைத் தடுத்திருந்தால்,
வாஸ்கோடகாமா இந்தியாவுக்கு வந்திருப்பாஞ?
பூனைக்கண் வெள்ளையன்தான் நாட்டில் புகுந்திருப்பாஞ?

வீங்கிப் பொங்கும்
கடலிடத்தில்
வீரமிருக்கிறது!
இதனிடம் ஈரமிருக்கிறது.
ஆனுல், இதன் இதயத்தில்
இரக்கந்தான் இல்லை!
இருந்திருந்தால்
அநியாயக் காரர்களையும்,
அக்கிரமக் காரர்களையும்

விழுங்காமல்,
தன்மீது தவறி விழுந்த
இளம்பெருவழுதி என்னும் வேந்தனை
இது விழுங்கியிருக்குமா?
அழகுராணி காமதை என்பவளும்,
ஆங்கில மகாகவி
ஷெல்லியும்தான் செத்திருப்பார்களா? என்றான் அவன்.

அப்போது அக்கடலோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவன், அலைகளின் ஆரவாரத்தைக் கண்டு அஞ்சி ஒதுங்கி ஓடிக் கொண்டிருந்தான். அதனைக் கண்ட பொய்யாமொழி சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் பூங்கோதை.

"அலைகளைக் கண்டஞ்சி அவ்விளைஞன் ஓடுவதைப் பார்த்தாயா?" என்றான் அவன்.

"பாம்பைக் கண்டு பயப்படாத சேனையோ,

நெருப்பைக் கண்டு பயப்படாத யானையோ உண்டா?"

நீருக்கும் நெருப்புக்கும் அஞ்சாதவர்கள் இவ்வுலகில் யாருமே இல்லை" என்றாள் பூங்கோதை.

"அப்படிச் சொல்லிவிடாதே! பஃறுளியாற்றை ஒழுங்குபடுத்தியவனும், மிகப்பெரிய வள்ளலுமாகிய பாண்டியன் ஒருவன், அலைகடலின் ஆரவாரத்தைக் கண்டு சிறிதும் அஞ்சாமல், அசையாமல் அப்படியே நின்றானும். அவனது அஞ்சாமையைக் கண்ட

பேரறிஞர்களும், புலவர் பெருமக்களும் அவனை 'வடிம் பலம்ப நின்ற பாண்டியன்' என்று பாராட்டினராம்.

மேலைக் கடலின் நடுவே, சில தீவுகளில் வாழ்ந்த சிற்றரசர்களை அடக்க வேண்டி, கடலின் ஆழத்தையும், அதன் பரப்பையும், ஆர்ப்பாட்டம் செய்யும் அலைகளையும் கண்டஞ்சாமல், அவை தன் பின்னே செல்ல கடலில் முன்னேறி பகைவர்களை வென்று திரும்பினனும். சேரன் செங்குட்டுவன், கடலை பிறக்கிடும்படி ஓட்டியவன் என்பதால் சான்றோர்கள் அவனை கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று பாராட்டினராம். நானும் அலைகளின் ஆரவாரத்தைக் கண்டு அஞ்சுவதில்லை என்றான் அவன்.

அப்படியென்றால், நீங்களும் ஒரு சேரன் செங்குட்டுவன் என்று சொல்லுங்கள் என்றாள் அவள்.

"நான் ஒரு சேரன் செங்குட்டுவன் மட்டுமல்ல! அன்றாடம் உன்னைச் சேரும் செங்குட்டுவனும் நான் தான்" என்றான் அவன்.

அவள் சிரித்தாள்.

பிறகு இருவரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு தாழை மரங்கள் மிகுதியாக வளர்ந்திருந்த இடத்தில் வந்தமர்ந்து, உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

அவன் அவளைப் பார்த்து,

சூரியனைக் கண்டால் தாமரை மலரும்
சந்திரனைக் கண்டால் அல்லி மலரும்

மின்னலைக் கண்டால் தாழை மலரும் என்றான் அவன்.

உங்களைக் கண்டால் என்முகம் மலரும் என்றாள் அவள்.

அப்போது, அவன் அவளது கையைத் தொட்டான். அவளோ, அருகில் தொங்கிக் கொண்டிருந்த தாழங்காயைத் தொட்டாள்.

"மக்களால் கொள்ளப்படாமல் தள்ளப்படும் இத் தாழங்காயை நீ ஏன் தொடுகிறாய்?" என்று கேட்டான் அவன்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்! தாழங்காய் மக்களால் தள்ளப்படும் காயா?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம், தாழங்காய் மக்களால் ஒதுக்கித்தள்ளப் படும் காய்தான்! நாவுக்கு மிகுந்த சுவை தராதபழத்தை நாவற்பழம் என்று சொல்லுவது போல, சாரமற்ற காயான இத்தாழங்காய் மக்களால் கொள்ளப்படாமல் ஒதுக்கித்தள்ளப் படுவதால்தான் இதனை எல்லோரும் தாழங்காய் என்று சொல்லுகிறார்கள், என்றான் அவன்.

"அப்படியா?" என்றாள் அவள்.

"ஆமாம்! காய்த்தும் பயன்படாத காய்—தாழங்காய்!

கனிந்தும் பயன்படாத பழம்—எட்டிப்பழம். நீயோ,

காய்த்தும் பயன்படுகிறாய், என் கரங்களுக்கு.

கனிந்தும் பயன்படுகிறாய், என் இதழ்களுக்கு.

என்று கூறிக்கொண்டே அவளைத் தழுவியபடி பெண்ணமுதே! பித்ததேகம் உடையவர்களுக்குத்தான் கடைக்கண் சிவப்பாக இருக்குமென்றும்; உடல் எப்போதுமே வெப்பமாக இருக்குமென்றும் சொல்லுவார்கள். உன்கடைக்கண் சிவப்பாகவும், உன்னுடல்

எப்போதும் வெப்பமாகவும் இருக்கிறதே உன்னுடைய தேகமும் பித்ததேகந்தானோ? என்று அவன் அவளைக் கேட்டான். உடனே அவள் அவனைப் பார்த்து,

"ஒரு மருத்துவரிடம் கேட்கவேண்டிய கேள்வியை, இந்த மங்கையிடம் கேட்கிறீர்களே?" என்றாள் அவள்.

"அதிருக்கட்டும்! அடிக்கடி என்னை நீ அத்தான் அத்தான் என்று அழைப்பாயே! இன்று நீ என்னை ஒரு முறைகூட அத்தான் என்று அழைக்கவில்லையே அது ஏன்?" என்று கேட்டான் அவன்.

அவள் சிரித்துக் கொண்டே, இன்று ஒரு பாடல் மூலமாகவே உங்களை அத்தான் அத்தான் என்று அழைக்கப் போகிறேன். நான் எத்தனை முறை உங்களை அத்தான் அத்தான் என்று அழைக்கிறேன் என்பதை விரல்விட்டு எண்ணிப் பாருங்கள் என்று கூறி—

கல்லைத்தான்
மண்ணைத்தான்
காய்ச்சித்தான்
குடிக்கத்தான்
கற்பித்தானா?
இல்லைத்தான்
பொன்னைத்தான்
எனக்குத்தான்
கொடுத்துத்தான்
இரட்சித்தானா?
அல்லைத்தான்
சொல்லித்தான்
ஆரைத்தான்
நோவத்தான்—ஐயோ வெங்கும்

பல்லைத்தான்
திறக்கத்தான்
பதுமத்தான்
புவியிற்றான்—பண்ணினனே

என்று பாடிக்காட்டி "இந்தப் பாடலில் எத்தனை அத்தான்கள் இருக்கின்றன பார்த்தீர்களா அத்தான்" என்று கேட்டாள் பூங்கோதை.

அடேயப்பா, ஒரே பாடலில் இத்தனை அத்தான்கள் அமையும்படியாக முதன்முதலில் பாடிய இராமச்சந்திர கவிராயரை நான் பாராட்டுகிறேன்" என்றான் பொய்யாமொழி.

உடனே அவள் அவனை நோக்கி, இவ்வாறு அத்தான் அத்தான் என்று முதன் முதலாகப் பாடியவர் நல்லூர் கவிராயரல்ல? நெல்லையில் பிறந்த வேதநாயக சாத்திரியார் என்பவரே இவ்வாறு முதன்முதலில் பாடியவர். அவர் இயற்றிய 'ஞானதச்சன் நாடகம்' என்னும் நூலில்,

ஒப்பத்தான் உண்மைமிகுஞ்
செப்பத்தான் தீவினைகள்
தப்பத்தான் அடியவர்க்குத்
துப்புத்தான் தூதருக்கும்
பொற்புத்தான் ஏதனென்ற
வெற்புத்தான் சொன்னபடி
மெய்ப்பித்தான் மானிடரைக்

கற்பித்தான் என முதன்முதலில் பாடிய வேதநாயக சாத்திரியாருக்குப் பிறகு,

கல்லைத்தான்,

மண்ணைத்தான் என்று நல்லூர் இராமச்சந்திர கவிராயரும், அவரையடுத்து

சீரைத்தான்
கோரித்தான்
தேரிற்றான்

ஏறித்தான்—என்று பாவேந்தர் பாரதிதாசனும் பாடினார். அவர்களைப் பின்பற்றித்தான்,

இன்றைய திரைப்படப் பாடலாசிரியர் ஒருவர்

"அத்தான் என் அத்தான்—அவர்
என்னைத்தான் அதை எப்படிச் சொல்வேனடி"

என்ற பாடலையும் எழுதியிருக்கிறார். பெரியமட்டு பு. ஆரோக்கிய நாயகர் என்பவரால் இயற்றப் பெற்று 1857-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள "தேம்பாவணிக் கீர்த்தனைகள்" என்னும் நூலில்,

ஞானத்தி லேஞான ஸ்நானத்திலே—ஜெபத்
தியானத்தி லேவருங் கியானத்திலே வேத
மானத்தி லேசொன் னிதானத்திலே தருந்
தானத்தி லேதின்மை யானத்திலே நின்று"

எனவரும் அடிகளைப் பின்பற்றித்தான் தேசியகவி பாரதியும்

"ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானகத்தி லேஅமு தாகநிறைந்த
கவிதையி லேஉயர் நாடு"

என்று எழுதியிருக்கிறார்" என்றான் அவன். உடனே அவள், அவனை நோக்கி,

"ஒரு மகாகவியைத்தான் மற்றவர்கள் பின்பற்று வார்கள். மகாகவி என ஒருசிலரால் அழைக்கப்படும் பாரதியே மற்றொரு கவிஞரைப் பின்பற்றி எழுத லாமா?" என்று கேட்டாள்.

"வளரும் நிலையிலிருப்பவர்கள், பெருங்கவிஞர் களைப் பின்பற்றி எழுதுவதில் தவறில்லை. ஒருவன் எவ்வளவு பெரிய கவிஞனாக இருந்தாலும் அவனைப் பின்பற்றி எப்போதுமே மற்றொருவன் எழுதிக் கொண் டிருப்பதுதான் தவறு" என்றான் அவன்.

"இதுவும் தவறுதான்; என்னை நீங்கள் அடிக்கடி வற்புறுத்துவதும் தவறுதான்" என்றாள் அவள்.

"ஆம்! இதற்குரிய தண்டனை முத்தம் கொடுப்ப தாக இருக்குமானால், இதனை நான் இப்போதே ஏற்றுக் கொள்கிறேன்" என்றான் அவன்.

தருவது
பெறுவது
மனம்விட்டுப் பேசுவது
கேட்பது
விருந்துண்பது
படைப்பது

ஆகிய இவை ஆறும் அன்புக்கும் நட்புக்கும் உரிய அடையாளங்கள் என்றாள் அவள்.

உருவம்
பருவம்
வண்ணம்
வனப்பு
அச்சம்
நாணம்

ஆகிய இவை ஆற்றும் அழகுக்கும் உன் அடக்கத்துக்கும் உரிய அடையாளங்கள்'' என்றான் அவன்.

''இளமை என்பது'' என்றாள் அவள்.

''ஓர் இன்பச் சுனை'' என்றான் அவன்.

''முதுமை என்பது'' என்றாள் அவள்.

''எல்லா நோய்களையும் ஏற்றுக்கொள்ளும் ஓர் மருத்துவமனை'' என்றான் அவன்.

அவள் ஏதோ அவனிடம் சொல்ல நினைத்தாள், சொல்ல முடியவில்லை.

அவன் ஏதோ ஒன்றைக் கொடுக்க நினைத்தான், கொடுக்க முடியவில்லை.

அப்போது, அவனுக்கு மன்மத மயக்கம்!

அப்போது, அவளுக்குக் கன்மத மயக்கம்!

அரும்பு மௌனம் சிறிதுநேரம் அங்கே வளர்ந்தது.

அதற்குப் பிறகு, அவன் அவளைப் பார்த்து—

''நமது நாட்டில் முதன் முதலாக அச்சுக்கூடம் 1712-ம் ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி என்னும் ஊரில்தான் நிறுவப்பட்டதாம். 'முத்தம்' என்னும் அச்சுக்கூடமோ, ஆதிமனிதன் தோன்றிய காலத்திலேயே நிறுவப்பட்டுவிட்டது'' என்று கூறிக்கொண்டே நெருங்கினர். அவளும் நெருங்கினாள்! இடைவெளி குறைந்தது. பிறகு இருவரும் ஒன்றாக ஒட்டிக்கொண்டனர். மிக நன்றாக ஒட்டிக் கொண்டனர்.

மன்மத மயக்கம் தீரும் வரையில்—
உதடுகள் ஓய்வெடுத்துக் கொள்ளவே இல்லை!
முதலில் மேட்டிலும்
பிறகு பள்ளத்திலும்
எச்சில் விளையாட்டு

இனிதே நடைபெற்று முடிந்த பிறகு, அவள் அவனைப் பார்த்து—

"ஒரு காரியத்தை தொடங்குமுன்
இத்தாலியன் புத்திசாலியாம்;
செய்து முடிக்கும்போது
ஜெர்மானியன் கெட்டிக்காரனும்;
முடிந்த பிறகு,
பிரஞ்சுக்காரன்
மேதாவியாம்!

அத்தான்! நீங்களும் ஒரு மேதாவிதான்" என்றாள் அவள்.

"நான் மேதாவியோ என்னவோ அது எனக்குத் தெரியாது. ஆனால் நான் எப்போதும் "உன் மேல் தாவி தான்" என்றான் அவன்.

அப்போது அவர்கள்மீது தாழைமரமொன்று தண்ணீரைத் தெளித்தது. இத்தாழைமரம் எதற்காக நம்மீது தண்ணீரைத் தெளிக்கிறது?" என்று அவள் கேட்டாள்.

"எதற்காகத் தெரியுமா? 1497-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த வாஸ்கோடகாமா என்ற போர்த்துக்கீசியன் பல்லக்கிலேறிக் கள்ளிக் கோட்டை வழியாகச் செல்லும் போது, அவ்வூரின் ஆலயத்திலிருந்து கொண்டுவரப் பட்ட தண்ணீரால் அவனையும் அவனோடு வந்தவர்களையும் கோயில் குருக்கள் சிலர் பரிசுத்தப்படுத்தினார்களாம்! அதேபோன்று இத்தாழை மரமும் தண்ணீரால் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது" என்றான் அவன்.

"இப்போது நம்மீது தண்ணீர் தெளிக்கும் இத்தாழைமரம் நம் திருமணத்தன்று பன்னீர் தெளிக்க வருமா?" என்று கேட்டாள் அவள்.

"சாட்சி சொல்வதற்காக வன்னிமரமொன்று நீதி மன்றத்திற்கு வந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுவது உண்மையானால், திருமணத்தன்று நம்மீது பன்னீர் தெளிக்க இத்தாழை மரமும் நிச்சயமாக வரும்" என்றான் அவன்.

அவள், தாழை மரத்தைப் பார்த்தாள்.

தாழம்பூ அவளைப் பார்த்தது.

அவன், அந்த முள் மலரைப் பார்க்காமல்,

அவளது முகமலரைப் பார்த்துக்கொண்டே இருந்தான்!

# கொய்யாப் பழமும் கொய்யும் பழமும்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய திருநீலகண்டநாயனுர் என்பவர், சிறிது காலம் தம் மணேவியைத் தொட்டுப் பழகியும், பின்னர் அவர் அவ்வம்மையாரை நெடுங்காலமாகத் தொடாமலேயே பழகியும் வந்தாராம். ஆனல் உதயசூரியன் அப்படியல்ல. அது, தாமரைப் பூக்களைத் தொடாமலேயே பழகி வரும் ஒரு நெருப்பு நாயகன்.

அது, தன் வெளிச்சத்தால், ஆண்களையும் பெண்களையும் அடையாளம் காட்டும். அவர்களின் ஆயுட் காலத்தையும் அது அன்ருடம் அளந்து காட்டும்.

சளி பிடித்த சந்திரன் இருக்கிறதே அது சூரியனைப் பார்த்து, "என் உடன் பிறப்பே" என்று அழைக்க முடியாது. ஏனென்ருல், சந்திரனும் சூரியனும் சேர்ந்து பிறக்கவில்லை.

தான் பெற்ற குழந்தையைப் பார்த்து தாயொருத்தி தான் "என் ரத்தத்தின் ரத்தமே" என்று அழைக்க முடியுமேயன்றி, மாற்ருந்தாய் அவ்வாறு அழைக்க முடியாது. அதுபோலவே, தன் வயிற்றிலிருந்து பிதுங்கிப் பிறந்த பூமியைப் பார்த்து "என் ரத்தத்தின்

ரத்தமே" என்று சூரியன்தான் அழைக்க முடியுமே யன்றி, சுக்கிரனே, செவ்வாயோ ராகுவோ கேதுவோ அவ்வாறு அழைக்க முடியாது. அழைக்கவும் கூடாது.

வெற்றி பெற்ற வீரனொருவன் உடம்பில் விழுப் புண்ணோடு தோன்றுவான். வீட்டில் நாம் ஏற்றி வைக்கும் ஓர் எண்ணெய் விளக்கு புகையொடு தோன்றும். உதயசூரியனே, அவ்வாறு உடம்பில் புண்ணோடும், உச்சியில் புகையொடும் தோன்றுவதில்லை. தோண்டப் படாத கருங்கடலில் அன்றாடம் அது தோன்றும் போதெல்லாம், புகழொடு தோன்றும்:

தோன்றும் போதெல்லாம் புகழொடு தோன்றும் அந்தச் சூரியன், அப்போது மேற்கு வானத்தில் மிதந்து கொண்டிருந்தது. நான்மணிமாலை என்பவளோ, 1891-ஆம் ஆண்டில் வெளிவந்த 'பெண்மதி போதினி' என்னும் திங்களிதழொன்றின் பத்தாவது பக்கத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் வளர்த்துவரும் பூனையோ அவள் பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்தது. வெளியூருக்குச் சென்றிருந்த அவள் கணவன் அப்போதுதான் வீட்டுக்கு திரும்பி வந்தான். அவனைக் கண்டவுடன் அவளது முகம் மலர்ந்தது. அவனது முகமும் மலர்ந்தது. ஒருவார காலமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அவனது உதடுகளும் அப்போது மலர்ந்தன.

அவள் அவனைப் பார்த்து, "ஊரில் எல்லோரும் நலமாக இருக்கின்றார்களா?" என்று கேட்டாள்.

"எல்லோரும் நலமாகவே இருக்கிறார்கள்" என்றான் அவன்.

அத்தை வீட்டுக்குச் சென்றீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"அத்தை வீட்டுக்கும் சென்றேன். பக்கத்திலுள்ள ஒரு மெத்தை வீட்டுக்கும் சென்றேன்" என்ருன் அவன்.

"மெத்தை வீட்டுக்கா? அங்கெதற்குச் சென்றீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"அவர்கள் வீட்டில் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்குப் பெயரிட வேண்டுமென என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்காகச் சென்றேன்' என்ருன் அவன்.

"அக் குழந்தைக்கு நீங்கள் என்ன பெயரிட்டீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"ஒரு குழந்தைக்குக் 'குநாலன்' என்று பெயர் வைத்தேன்; மற்ருெரு குழந்தைக்குத் 'திண்ணன்' என்று பெயர் வைத்தேன்" என்ருன் அவன்.

"என்ன குநாலனு?"

"ஆமாம்! மாமன்னன் அசோகனுடைய மகன் ஒருவனுக்குக் குநாலன் என்று பெயர். அவனுடைய கண்கள் 'குநாலம்' என்னும் பறவையின் கண்களைப் போன்று மிக்க ஒளியுடையதாகவும் கருமையாகவும் இருந்த காரணத்தால் அவனுக்குக் குநாலன் என்று பெயரிட்டார்களாம். அந்த மெத்தை வீட்டு ஆண் குழந்தையின் கண்களும் அவ்வாறே இருந்ததால் அக் குழந்தைக்கு நான் குநாலன் என்று பெயரிட்டேன். கண்ணப்பநாயஞர் மற்ற குழந்தைகளைக் காட்டினும், பிறந்தவுடன் அதிக கனமாக, அதாவது திண்ணென்றிருந்தாராம். அதனுல் அவருக்குத் திண்ணன் என்று பெயரிட்டார்களாம். அவ்வாறே அவர்கள் வீட்டில் பிறந்துள்ள மற்ருெரு ஆண்குழந்தையும் திண்ணென்றிருந்த காரணத்தால் அக்குழந்தைக்கு நான் திண்ணன்

என்று பெயரிட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே, ஊரிலிருந்து தான் கொண்டுவந்த புதிய புத்தகங் களையும் பொருட்களையும் எடுத்து ஓரிடத்தில் வைத்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி அப்போது உள்ளே சென்று தேனீரைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதனைப் பருகிய பிறகு, அவளைப் பார்த்து ''நீயும் நானும், 1964 - ஆம் ஆண்டில் ஓர் ஆற்றங்கரை ஓரத்தில் முதன்முதலாக அறிமுகமா னோம். தேனீர் தயாரிப்பதற்கும் தேயிலையோ, இந்தியா வில் முதல் முதலாக 1604 - ஆம் ஆண்டில் அக்பரின் ஆட்சிக் காலத்தில் அறிமுகமாயிற்றும், '' என்று கூறியபடி தான் வாங்கி வந்த கொய்யாப் பழங்களை அவளிடம் கொடுத்தான். அவள் அப்பழங்களை வாங்கிக் கொண்டு, ''இந்தப் பழத்திற்கு வைக்கப்பட்ட பெயரை நினைக்கும்போது எனக்குச் சிரிப்பு வருகிறது' என்றாள்.

''ஏன் ?'' என்று கேட்டான் அவன்.

''கொய்யக் கூடிய பழத்தைக் கொய்யாப் பழ மென்றும், பொல்லாத பாம்பை நல்லபாம்பென்றும், அழைக்கின்றார்களே என்பதை நினைத்தால் சிரிப்பு வராதா ?'' என்றாள் அவள்.

அவன் வளர்த்துவரும் பூனை அப்போது அவன ருகில் வந்து மியாவ் மியாவ் என்று கத்திக் கொண் டிருந்தது. அவன் அப்பூனையின் வாலைப் பிடித் திழுத்தான். அவள் அவனைப் பார்த்து,

இது ஓர் பூனை என்பதால் நீங்கள் இதன் வாலைப் பிடித்து இழுத்தீர்கள். இதுவே ஒரு புலியாக இருந்தால் அப்போது இதன் வாலைப் பிடித்து நீங்கள் இழுத்திருப் பீர்களா என்று கேட்டாள்.

"பூனையின் வாலைத்தான் யாரும் பிடித்திழுக்க முடியும். புலியின் வாலை யாருமே பிடித்திழுக்க முடியாது?" என்றான் அவன்.

"உங்களால் முடியாதென்றால் வேறு யாராலும் முடியாதென்று ஏன் சொல்லுகிறீர்கள். மாவீரன் மருது பாண்டியன் புலியின் வாலைப் பிடித்து பரபரவென் றிழுத்து, பின்னங்கால்களைப்பற்றிச் சுழற்றித்தரையில் அடித்துக் கொன்று விடுவானாம்" என்று கூறினாள் அவள்.

"அதைக் கேட்டு வியப்படைந்து, அப்படிப்பட்ட மாவீரனா அவன் ?" இருக்கட்டும் விரைவில் நானும் ஒரு புலியின் வாலை இழுத்துக் காட்டுகிறேனா இல்லையா என்பதைப் பார்" என்றான் அவன்.

உடனே அவள் அவனைப் பார்த்து, வேண்டாம் வேண்டாம்! நீங்கள் ஒரு புலியின் வாலையும் பிடித் திழுக்க வேண்டாம். நம் வீட்டு எலியின் வாலையும் பிடித்திழுக்க வேண்டாம். நீங்கள் சும்மா இருந்தால் அதுவே போதும் என்றாள்.

'சும்மா இரு' என்று உபதேசம் செய்த துறவி களாலேயே சும்மா இருக்க முடியவில்லையே என்றால் எப்படி சும்மா இருக்க முடியும் என்றான் அவன்.

"அதிருக்கட்டும் புலவர் ஏழுமலை என்பவர் உங்களுக்கு எழுபது ரூபாய் தரவேண்டுமே அக்கடன் தொகையை இப்போதாவது கொடுத்தாரா ?" என்று கேட்டாள்.

"அவன் பன்னிரண்டு ரூபாய்தான் கொடுத்தான், என்றான் அவன்.

"அப்படியென்றால் மீதி ஐம்பத்தெட்டு ரூபாயை இனி எப்போது கொடுப்பாராம்" என்று கேட்டாள் அவள்.

"இனிமேல் அவன் எங்கே அதைக் கொடுக்கப் போகிறான். ஒட்டக் கூத்தர் இயற்றிய 'எழுப்பெழுபது' என்னும் நூலிலுள்ள எழுபது பாடல்களுள், பன்னிரண்டு பாடல்களே கிடைத்திருக்கின்றன. எவ்வளவு முயன்றாலும் இனி ஐம்பத்தெட்டுப் பாடல்களும் கிடைக்க போவதில்லை. புலவர் ஏழுமலையிடமிருந்து இனி ஐம்பத்தெட்டு ரூபாயும் நமக்குக் கிடைக்கப் போவதில்லை "என்றான்.

"உங்கள் நண்பர்கள் எல்லோரும் இப்படித்தானே! யார் நாணய முள்ளவர்கள்? உங்களிடம் வாங்கிய கடனை யார் இதுவரையில் ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்? இப்படி கொடுத்துக் கொடுத்தே நீங்கள் இதுவரை மூவாயிரத்தை நூறு ரூபாய் இழந்திருக்கிறீர்கள்" என்றாள் அவள்.

"நண்பர்கள் கேட்கின்றார்களே என்று கொடுத்தேன் அவர்கள் இப்படி என்னை ஏமாற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நானாவது மூவாயிரத் தைந்நூறு ரூபாயை இழந்திருக்கிறேன். காலஞ்சென்ற பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் முப்பத்தையாயிரம் ரூபாய்க்குமேல் இழந்திருக்கிறார். புலவர்பலருக்கு அவர் கடனாகத்தந்த ரூபாய் முப்பத்தை யாயிரத்திற்கு மேற்பட்ட புரோ நோட்டுப்பத்திரங்களை இனி வசூலிக்க முடியாதெனத் தெரிந்து கிழித்தெறிந்து விட்டாராம்" என்று கூறினான் அவன்.

"இனிமேலாவது உங்கள் நண்பர்களிடத்தில் எச்சரிக்கையாக இருங்கள்" என்றாள் அவள்.

இனி எச்சரிக்கையாக இல்லாவிட்டால்—நிச்சயம் நாம் பிச்சை யெடுக்க வேண்டியதுதான்'' என்றான் அவன்.

மாலை அணியாத மாலைப் பொழுது,

மது அருந்தாமலேயே மயங்கிக் கொண்டிருந்தது.

பிறந்த தேதியை மறந்து விட்ட சூரியன், அப்போது மேற்கு வானத்தை விட்டு மெதுவாகக் கீழிறங்கி நீலக் கடலில் நீராடிக் கொண்டிருந்தது.

அந்தி என்று அழைக்கப்படும் அந்த நேரத்தில், அவனும் அவளும் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டனர். புறப்பட்டுச் செல்லும் வழியில், ஓர் ஏழையின் குடிசை தீப்பற்றி எரியும் செய்தியைக் கேள்வியுற்று, ஆங்கே இருவரும் விரைந்து சென்று, மற்றவர்களோடு தாங்களும் நின்று, அத்தீயை அணைத்தபின் அவ்விடத்தை விட்டுப் புறப்படும்போது அவன் அவளைப் பார்த்து—

''இப்படித்தான் மேலைநாட்டுப் பேரறிஞர் எமர்சன் என்பவரின் வீடும் 24-7-1872 ஆம் ஆண்டில் தீப்பிடித்து எரிந்து விட்டதாம். அவ்வாறு எரிந்து போகவே, பொதுமக்கள் அனைவரும் உடனே நிதி திரட்டி, அவருக்குப் புதிய வீடொன்று கட்டிக் கொடுத்தார்களாம்'' என்று கூறினான்.

''அப்படியா! அந்நாட்டு மக்கள் அப்படிச் செய்தார்கள். இந்நாட்டு மக்கள் அப்படிச் செய்வார்களா? பாவம்! இந்த ஏழைக்கு இரங்குபவர்கள் இவ்வூரில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. இவனுக்காக

இவனே அழுது கொள்ள வேண்டியதுதான்,'' என்று கூறினாள்.

பிறகு அவர்களிருவரும் ஒரு குளக்கரைக்கு வந்து, ஆங்கிருந்த படிக்கட்டுகளின் மீதமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''இதுதான் திம்மராஜன் குளம்'' என்று அவன் அவளிடம் கூறினான்.

''இந்தக் குளம், போரூர் தெப்பக் குளத்தை விடப் பெரிதாக இருக்கிறது'' என்றாள் அவள்.

''அரசன் ஒருவன் வெட்டிய குளமாயிற்றே, பெரிதாக இல்லாமல் சிறிதாகவா இருக்கும்'' என்றான் அவன்.

''அரசன் வெட்டிய குளமா இது ?'' என்று அவள் கேட்டாள்.

''ஆமாம். கி. பி. 1515- ஆம் ஆண்டில் விஜய நகர சமஸ்தானத்தில் ஓர் அமைச்சனாயிருந்து, பிறகு அவ்வரசனின் கட்டளைப்படி செங்கற்பட்டை அரசாண்ட திம்மராஜன் என்பவனால் வெட்டப்பட்ட குளந்தான் இந்தக் குளம். கலிங்கத்தில் அன்று சிந்திய ரத்தம், நம் நாட்டின் வீரத்தை நமக்கு நினைவூட்டுகிறது. திம்மராஜன் அன்று வெட்டிய இந்தக் குளம், அவனது நற்செயலை நமக்கு நினைவூட்டுகிறது. அவனைப் பற்றி நம் நாடும் பேசுகிறது; நாமும் இப்போது பேசுகிறோம். இக் குளத்தில் இருக்கும் தாமரைப் பூவுக்கு நாக்கிருந்தால், நம்மைப்போல் இதுவும் அவனது பெருமைகளை எடுத்துரைக்கும்'' என்று கூறினான் அவன்.

அப்போது அவன் மனைவியோ, தண்ணீர்ப் புடவை கட்டிய தாமரைப் பூக்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனோ அவளை உற்றுப் பார்த்தான்.

"அத்தான்! நான், அந்த அம்மராஜன் குளத்தில் நீராடியிருக்கிறேன். ஆனால் இதுவரை இத் திம்மராஜன் குளத்தில் நீராடியதில்லை. இப்போது இக்குளத்தில் நான் நீராடட்டுமா?" என்று கேட்டாள்.

"வேண்டாம். தாமரைக் குளத்தில் நீராடினால் அடிக்கடி தாகமெடுப்பதோடு, வாதபித்தமும் அதிகரிக்கும். அல்லிக் குளத்தில் நீராடினாலும் அஜீர்ண பேதி உண்டாகும்" என்று கூறினான்.

"அப்படியென்றால், நான், ஆற்று நீரிலும் ஊற்று நீரிலுந்தான் குளிக்க வேண்டுமா?" என்று கேட்டாள்.

"பகலில் நீ ஊற்று நீரிலும்; இரவில் என் உதட்டு நீரிலும் குளிப்பதுதான் நல்லது" என்று கூறினான்.

அப்போது, அக் குளத்திலிருந்த கவலையில்லாத தவளைகள் சத்தமிடத் தொடங்கின.

"அத்தான்! நம் இன்ப உரையாடலுக்கு இடையூறு விளைவிக்கும் இத் தவளைகளைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள்" என்று கூறினாள்.

"பரிச்சித்து மகாராஜனைப் போல என்னையும் நீ ஒரு பைத்தியக்காரன் என்று எண்ணிவிட்டாயா?" என்று கேட்டான்.

"அப்படியென்றால், அந்தப் பரிச்சித்து மகாராஜன் உண்மையிலேயே ஒரு பைத்தியக்காரன் தானா?" அவன் அப்படி என்ன பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டான்?" என்று அவள் கேட்டாள்.

"சூரிய குலத்தவனுகிய அந்தப் பரிச்சித்து மகாராஜன், ஆயுத மகாராஜனின் மகள் சோபனை என்பவளைக் காட்டில் மணந்து அவளோடு ஒரு தடாகத்தில் நீராடும்போது அவள் நீரில் மறைய அவ்விடமிருந்த தவளைகள் அவளை விழுங்கி விட்டன என்று கருதி அவன் அக்குளத்திலிருந்த தவளைகளை யெல்லாம் கொலைபுரியச் செய்தானும்! அவன் ஒரு பைத்தியக்காரனுக இல்லாவிட்டால் அவ்வாறு செய்திருப்பானு ?" என்று அவன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"அத்தான்! அவன் எவ்வளவு பெரிய பைத்தியக்காரன் என்பது, எனக்கு இப்போதுதான் புரிகிறது. அந்தப் பைத்தியக்காரனை ஒரு நாட்டின் மன்னனுக ஏற்றுக்கொண்ட மண்ணின் மைந்தர்களும், அவனுக்குப் பெண் கொடுத்த ஆயுத மகாராஜனும் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும்" என்று கூறினுள்.

"சில நேரங்களில் சில பெரிய மனிதர்கள், அயோக்கியர்களை ஆட்சி பீடத்தில் அமர்த்தி விடுகிருர்கள் மடையர்களையும் மேதாவிகளாகக் கருதி விடுகிருர்கள்" என்று கூறியபடி அவன் அவ்விடத்தை விட்டு எழுந்தான். அவளும் எழுந்தாள். வெண்ணிலவும் வானத்தில் எழுந்தது.

அன்றிரவு குளிர் மிகவும் அதிகமாக இருந்தது.

அவளுக்கு அப்போது ஒரு போர்வை தேவைப்பட்டது.

அவனுக்கு அவளுடைய பார்வை தேவைப்பட்டது. பருவசுகமும் தேவைப்பட்டது.

அன்றிரவை,

அன்றில் இரவாக்க வேண்டும் என விரும்பிய அவன் அவளிடம் நெருங்கினான். அவளோ சற்று விலகினாள். அவளது மேலாடை அப்போது அவளது மார்பை விட்டு விலகியது. பளிச்சென்று வெளியில் தெரிந்த அவளது பால் கலசங்களைப் பார்த்தவுடனே அவன் தன் கண்களை மூடிக் கொண்டான். அப்போது அவள் அவனைப் பார்த்து "அத்தான் ! ஏன் கண்ணை மூடிக் கொண்டீர்கள் ?" என்று கேட்டாள்.

அப்போது அவன் அவளைப் பார்த்து "ஊர்வசி என்பவள் தேவலோகத்தில் ஒருநாள் இந்திரன் சபையில் நடனமாடிய போது, அவளது மேலாடை மார்பகத்தை விட்டு விலகி விட்டதாம். அதனைக் கண்டவுடன் இந்திரனும் அம் மன்றத்தில் இருந்த மற்றவர்களும் அவரவர் கண்களை மூடிக்கொண்டு அவளுடைய மானத்தைக் காத்தார்களாம். அந்த நிகழ்ச்சி இப்போது என் நினைவுக்கு வந்ததால், உன் மேலாடை விலகியதும் நானும் என் கண்களை மூடிக்கொண்டேன்" என்று கூறினான்.

அவள் அப்போது அவனைப் பார்த்து "ஒருசிலர், வீட்டில் இருக்கும்போது இப்படி நல்லவர்கள் போல நடிப்பார்கள். இதே காட்சியை வெளியில் அவர்கள் கண்டால், வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருப்பார்கள்" என்று கூறினாள்.

அதைக் கேட்டவுடன், அவன் தன் சொந்தச் சிரிப்பைச் சினமாக மாற்றினான். அவனது பழுத்த கோபத்தை அவள் பதமாக மாற்றினாள். பின்னர், அவனது கோபம் குறைந்தது. குறைந்த கோபம்,

அவளது புன் சிரிப்பைக் கண்டு கரைந்தது. மணலில் வீழ்ந்த மழைத்துளிகளைப் போல முடிவில் அது மறைந்தது.

"அத்தான்" என்ருள்.

"நான் உனக்குத்தான்" என்ருன்.

"நீர் வேண்டுமா ?" என்று கேட்டாள்.

"நீர் வேண்டாம். இப்போது நீதான் வேண்டும்" என்ருன்.

அவள் புன்னகை காட்டினுள்.

"புன்னகை, பல விஷயங்களை நேராக்கும் ஒரு சிறிய வளைவு" என்று கூறியபடி அவளுடைய கண்களில் முத்தமிட்டான்.

"என்னங்க இது! என் கன்னத்தில் முத்த மிடாமல் என் கண்களில் முத்தமிடுகிறீர்கள். சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள், குழந்தையின் கண் களில்தான் முத்தமிடுவார்களாம். என்னையும் ஒரு குழந்தை என்று நீங்கள் எண்ணி விட்டீர்களா ?" என்று கேட்டாள்.

"நீ, கண்களைப் போல் சிறந்தவள். அதனுல்தான் நான் உன் கண்களில் முத்தமிட்டேன்" என்று கூறினுன்.

"மனேன்மணீயம் என்னும் நாடகநூலின் ஆசிரியர் ராவ்பகதூர் சுந்தரம் பிள்ளையவர்கள், ஆண்டுதோறும் வரும் கோடை விடுமுறை காலங்களில் பெரும்பாலும் பாடல் பெற்ற திருக் கோயில்களுக்குச் சென்று அக் கோயிற் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் கல்

'வெட்டுக்களை ஆரச்ய்ச்சி செய்வாராம் நீங்களோ என் கண் வெட்டுக்களை அடிக்கடி ஆராய்ச்சி செய்கிறீர்கள்'' என்று அவள் கூறினாள்.

''கலந்துறவாடும் வேளையில் கண்வெட்டுஆராய்ச்சி தான் செய்ய வேண்டும்'' என்று அவன் கூறினான்.

அப்போது அங்கே,

இரண்டாவது கட்ட வாக்குப் பதிவு நடைபெற வில்லை;

இரண்டாவது கட்ட 'வாய்ப்பதிவு' நடைபெற்றது.

அது முடிந்தபின்,

அறைக்குள் அவள் சென்றாள்.

அவன் அவளோடு

பாதி நாடகம் நடத்தினான்.

வௌவால் அடித்துத் தின்னும்,

அணில் கடித்துத் தின்னும்,

அவனோ அவளைப் பிடித்துத் தின்றான்

பின்னர் இடித்து நின்றான்.

ராஷ்ட்ரபதி ஆகமுடியாத அவன்,

'ராத்திரிபதி' ஆனான்.

நன்னீர் நதியாக இருந்த அவள்,

வெந்நீர் நதியானாள்.

பளிச்சென்று முத்தமிட்ட போது,

அங்கே பல்லவி பிறந்தது.

ஆர்வத்தோடு தழுவிய போது,

அங்கே அநுபல்லவி பிறந்தது.
சரச மாடிய போது,
அங்கே சரணம் பிறந்தது.
விளிம்பு தேயாத வெண்ணிலவை
அவள் பார்த்தாள்.
மேடு கட்டிய இடத்தில் வேடு கட்டிய
அந்தப் பெண்ணிலவை
அவன் பார்த்தான்
சுகக் கதவைத் திறப்பதற்கு முன்
அவள் தன் முகக் கதவைத் திறந்தாள்.
முத்த மிடுவதற்காக,
அவளை முற்றத்திற்கு அழைத்தான்.
அணைத்து மகிழ்ந்திட வேண்டி,
"அன்பே ! அருகில் வா !
இந்த அறைக்கு வா !"
என்று அவளை அழைத்தான்.
"நீங்கள் எதைச் செய்தாலும்
எதுகை மோனை என்னும்
பொருத்தம் பார்த்தல்லவா செய்வீர்கள்"
என்று சொல்லிக் கொண்டே,
முதலில் அவள், முற்றத்திற்கு வந்தாள்.
அவன் அவளை முத்தமிட்டான்.
அவள் அதன் பிறகு, ஓர் அறைக்குள் சென்றாள்.
அவன் அவளை அணைத்து மகிழ்ந்தான்.
அந்த வீட்டுப் பூனை,
கண்களை மூடிக் கொண்டிருந்தது.
இரவு நேரம்,
மறுநாள் ஓரத்திற்கு ஓடிக் கொண்டிருந்தது.

---

# பகுத்தறிவு மனைவி தொகுத்தறியும் கணவன்

ஒரே கோத்திரத்தில் உதித்தவளையும், தேகத்தில் கொடிய நோயுடையவளையும், பழிமொழியுடைய குடும்பத்தில் பிறந்தவளையும், விரும்பத்தக்க பெருமையில்லாத பெண்ணையும், பாம்பின் பெயரையும், பறவைகளின் பெயரையும், மலையின் பெயரையும், நட்சத்திரங்களின் பெயரையும் உடைய பெண்ணைத் திருமணம் செய்யலாகாது என்று இங்நாட்டுச் சருகு சாத்திரங்கள் கூறுகின்றன.

அத்தகைய சருகு சாத்திரங்களையும், சடங்குச் சிந்தனைகளையும், ஏற்றுக் கொள்ளாத நரிக்குடி நாராயணசாமியோ, பாம்பின் பெயரைக் கொண்ட 'நாகம்மை' என்பவளை இராகு காலத்தில் திருமணம் செய்துகொண்டவன்.

பாம்பின் பெயரைக் கொண்ட அவன் மனைவி அவனை எத்தனையோ முறை தீண்டியிருக்கிறாள். அவள் அவனைத் தீண்டிய போதெல்லாம் மஞ்சத்திற்குத்தான் சென்றிருக்கிறானேயன்றி, அவன் மருத்துவமனைக்குச் சென்றதில்லை.

அவன் அவளைப் பலமுறை அடித்திருக்கிறான். அவள் அவனிடம் அடிவாங்கிய போதெல்லாம், அவள் சிரித்ததுண்டே யன்றி, "ஐயோ! வலிக்கிறதே" என்று அழுததில்லை.

அவள் தீண்டியும் அவனுக்கு விஷமேறியதில்லை.

அவன் அடித்தும் அவளுக்கு வலித்ததில்லை.

உலகக் குத்துச்சண்டை வீரனாகிய முகமது அலியைப் போல் நரிக்குடி நாராயணசாமியும், ஆறடி ஐந்தங்குல உயரமும், ஆஜானுபாகுவான தோற்றமும் உடையவன்.

முகமது அலியின் மனைவி வெரோனிகாவைப் போல், அவன் மனைவி நாகம்மையும் ஆறடி உயரமும், அழகான தோற்றமும் உடையவள்.

அவளது தமிழ்முகம் ஒரு தாமரைப்பூ! அவளுடைய கன்னங்கள் பழகிக் கனிவதற்கு முன்பே பருவத்தால் கனிந்த மதுர மாங்கனிகள். மூடும் மேடுகளோ, குறிஞ்சி நிலத்தில் வளரும் கோங்கின் அரும்புகள். விங்கி, இறுக்கமுற்றுப் பக்கத்தில் பருத்து மேலாடைக்குள் உறங்கும் மெல்லிய சதைப் பந்துகள்.

அவளுடைய நீள்விழிகள், நீலவானத்தின் இறக்கு மதி! சேல் கெண்டைகள் போட்டுவைத்த சிறு சேமிப்பு! அவளது கருங்கூந்தலோ, அவசரத்தில் அவிழ்ந்து தொங்கும் இருண்ட மேகம்! வெளிச்சத்தைக் கண்டு விலகிச் செல்லாத விநோத இருட்டு!

அவள் ஒரு பகுத்தறிவு மனைவி.

அவன் ஒரு தொகுத்தறியும் கணவன்.

அன்றிரவு, நிலா முற்றத்தில் அவன் மனைவி நின்று கொண்டிருந்தாள். அவன் ஒரு கட்டிலில்

அமர்ந்து, கூடலூர் வீரபத்திர படையாச்சி இயற்றிய 'லாகிரிச்சிந்து' என்னும் நூலைப் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன், அவளைப் பார்த்து இந்த நூற்றாண்டில், மதுவிலக்கைப்பற்றி முதன் முதலில் பாடல் பாடியவர் யார் தெரியுமா? என்று கேட்டான்.

"சிறுமணவூர் முனுசாமி முதலியார்" என்றாள் அவள்.

"இல்லை அல்லை, அவர் பாடுவதற்கு முன்பே அதாவது, 1903-ஆம் ஆண்டிலேயே கூடலூர் வீர பத்திர படையாச்சி என்பவர்தான் முதன் முதலாக மதுவிலக்கைப் பற்றிப் பாடல் பாடியவர்" என்றான் அவன்.

மதுவிலக்கைப்பற்றி முதலில் யார் பாடியிருந்தாலென்ன? இந்நாட்டில் குடிகாரர்களின் தொகை இன்னும் குறையவில்லையே" என்றாள்.

"ஆமாம், நீ கூறுவதுபோல், குடிகாரர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் நம் நாட்டில் கூடுதலாகிக் கொண்டு வருகிறதே தவிர குறையவில்லை" என்றான்.

"இந்த நாட்டில் பாமர மக்கள் மட்டுமா குடிக்கிறார்கள்? நன்கு படித்தவர்களும் அல்லவா குடிக்கிறார்கள். இந்தக் காலத்தில்தான் இப்படியென்றால், அந்தக் காலத்தில் வாழ்ந்த பெரிய மனிதர்கள் சிலரும் இப்படித் தான் குடித்துக் கெட்டுப் போயிருக்கிறார்கள்" என்றாள்.

"ஆமாம் விஸ்வாமித்திரர் ஒருநாள் தம் சேனையோடு, வசிஷ்டர் ஆச்சிரமத்திற்குச் சென்றபோது வசிஷ்டர் விஸ்வாமித்திரருக்கும். அவரது சேனைகளுக்கும் விருந்து வைத்தாராம், அவ்விருந்தில் மதுவும் வழங்கப்பட்டதாம். இந்த நேரத்தில் மற்றொரு

நிகழ்ச்சியும் என் நினைவுக்கு வருகிறது. திருக்குற்ருலத்தில் வாழ்ந்த தருமி என்னும் பார்ப்பனன் ஒருவன் வேசியர் வலையில் சிக்குண்டு, செல்வத்தையெல்லாம் இழந்து, தன் காமக் கிழத்தியிடம் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமெனக் கேட்டாளும், ;அவளோ, தண்ணிருக்குப் பதிலாக அவனிடத்தில் மதுவைக் கொடுத்தாளாம்" என்ருன் அவன்.

"இப்படிப்பட்ட வசிஷ்டர்களும், விசுவாமித்திரர் களும் தருமிகளும் பெருகிக் கொண்டிருந்தால் குடிப்பவர்களின் தொகை எங்கே குறையப் போகிறது? மது விலக்குக் கொள்கை தான் எங்கே வெற்றி பெறப் போகிறது?" என்று கூறினள்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, திருவள்ளுவர் அன்றைய குடிகாரர்களைப் பார்த்து "உண்ணற்க கள்ளை" என்று கூறினர். அந்தக் குடிகாரர்கள் அவர் பேச்சைக் கேட்டார்களா? கேட்கவில்லை. பேரறிஞர் ஏம சந்திர சூரி என்பவர், பன்னிரெண்டாம் நூற்ருண்டிலேயே சுமார் பதினெட்டு நாடுகளில் மது விலக்கை அமுல் நடத்தும்படி செய்தார். அவ்வாறு செய்தும் குடிப்பவர்களின் தொகை குறையவில்லை. தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, தமது தோட்டத்திலிருந்த ஐந்நூறு தென்னை மரங்களையும் வெட்டச் செய்தார். மரங்கள்தான் குறைந்தன" மதுகுடிப்போர் தொகை குறையவில்லை என்ருன்.

அதிருக்கட்டும், உங்கள் நண்பர்களில் பலர் குடிப்பார்களாமே, அவர்களோடு செல்லும் நீங்கள், அவர்கள் குடிக்கும்போது நீங்கள் மட்டும் குடிக்காமலா இருந்திருப்பீர்கள்?" என்று கேட்டாள்.

"நானு, குடித்தேனு? என் நண்பர்களில் பலர் குடிப்பதுண்டு. அவர்கள் குடிக்கும்போது நான் அருகில் இருந்ததுமுண்டு. என்னைக் குடிக்கும்படி நண்பர்களும் வற்புறுத்தியதுண்டு. தனக்குப் பிடிக்காத தமிழறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை, மயிலை மகாவித்வான் சண்முகம் பிள்ளை முதலிய பெரிய வித்துவான்கள் காலமானபோது, பலர் வற்புறுத்தியும் அவர்கள்மீது இரங்கற்பாக்கள் பாட சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் எப்படி மறுத்தாரோ அதைப் போலவே எனக்குப் பிடிக்காத மதுவை நண்பர்கள் குடியென்று வற்புறுத்தியும் நான் குடித்ததில்லை. நான் மதத்தை மட்டுமல்ல; மதுவையும் தள்ளி வைத்திருக்கிறேன்" என்ருன் அவன்.

"இவற்றை மட்டுமல்ல, என்னையும் சிலசமயம் தள்ளி வைக்கிறீர்கள்" என்ருள் அவள்.

"சீன தேசத்து ஞானி கன்பூஷியஸ் என்பவன், படிக்கவும், பொதுவான காரியங்களைக் கவனிக்கவும் தனக்குப் போதுமான நேரம் வேண்டுமெனக் கருதித் தன் மனைவியை அவன் நான்குமுறை தள்ளிவைத்தானும். நான் உன்னை மாதம் ஒருமுறை தானே தள்ளி வைக்கிறேன்." என்ருன் அவன்.

மங்கை ஒருத்தியை இயற்கை எதற்காக மாதம் ஒருமுறை தள்ளிவைக்கிறது என்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு அவள் சிரித்தாள்.

அவன் அவளைக் கண்களால் அழைத்தான்.

அவள் அவனைக் கண்களால் இழுத்தாள்.

அழைத்தவன், இழுத்தவளின் அருகில் சென்ருன்

அன்ருடம் இனிப்பவளே!